# பாலைதீவு விபத்தில் மாண்ட குடும்பங்களுக்கு


Regestred as a News Papar in Ceylon விலைசதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 12
இதழ்: 23
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் மாசி 22 ஜுல்ஹஜ் 26 வியாழக்கிழமை [5-3-70]



## இனும்!

அண்ணா கோப்பி

வாங்கும் அன்பர்களுக்கு அழகான பொலிதீன் பாக். இம்முறை மகா சிவராத்திரியன்று திருக்கேதீஸ்வரத்தில் எமது விளம்பர வானில் பெற்றுக் கொள்ளலாம்.

அண்ணா இன்டஸ்றி,
இணுவில்.


## அரசில் வேலைவாய்ப்பு

## யாழ்ப்பாணத்தில் ஜே. ஆர். அறிவிப்பு

### நிவாரண உதவியும் கிடைக்கும்

(நமது நிருபர் வி. பரராஜசிங்கம்)

யாழ்ப்பாணம், வியாழன்

பாலைதீவு படகு விபத்தில் மாண்டவர்களின் குடும்பங்களுக்கு பெருந் தொகையான நிவாரண உதவியை அரசாங்கம் வழங்குவதுடன் உழைப்பாளிகளை இழந்து பரிதவிக்கும் அந்தக்குடும்பங்களிலுள்ள பொறுப்பானவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும் என்று நேற்று மாலை யழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் நடந்த விசேஷ மகாநாடொன்றில் ராஜாங்க அமைசர் திரு.ஜே.ஆர்.ஜெயவர்த்தன உறுதி தெரிவித்தார்.

ராஜாங்க அமைச்சர் தலைமையில் நடந்த இந்த மகாநாட்டில் யாழ். அரசாங்க அதிபர், அரசாங்க அதிகாரிகள், எம். பி.க்கள் யாழ் மேயர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பாலைதீவுப் படகு விபத்தில் மாண்டவர்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் கண்கலங்க மகாநாட்டு மண்டபத்தில் அமர்ந்திருந்தனர்.

படகு விபத்தில் மாண்டவர்களின் குடும்பங்களுக்கு பிரதமர் சார்பிலும், அரசாங்கத்தின் சார்பிலும் தனது ஆழ்ந்த அனுதாபத்தை ராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

வழமையாக இப்படியான விபத்துகளுக்கு வழங்கப்படும் நிவாரண உதவியை போலல்லாது, பெரும் தொகையான நிவாரணம் இந்த விபத்தில் மாண்டவர்களின் குடும்பங்களுக்கு அரசாங்கம் வழங்குமென்று ராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

இந்தத்தொகை அரசாங்க அதிபர், எம். பி.க்கள், அரசாங்க அதிகாரிகள் ஆகியோருடைய சிபார்சுகளின் பேரிலே வழங்கப்படுமென்றும் அவர் கூறினார்.

உழைப்பாளிகள், தலைவர்கள் ஆகியோர் விபத்தில்மாண்டு போன குடும்பங்களிலுள்ள மற்றையவர்களுக்கு அரசாங்க, கூட்டுத்தாபனங்களில் வேலைவாய்ப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் ஜே. ஆர். கூறினார்.

வருங்காலத்தில் இப்படியான கொடிய படகு விபத்துகள் நடைபெருவண்ணம் தற்போதுள்ள சுங்கப் படகு சம்பந்தமான சட்டங்கள் கடுமையாக அமுல்நடத்தப்படுமென்றும் ராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

யாழ் அரசாங்க அதிபர் திரு. பீட்டர்ஸ் பேசுகையில் படகு விபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் நிலை பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. உடனடியாக அரசாங்க உதவிவழங்கக் கால தாமதமாகலாம், ஆகையால் சமூக சேவை ஸ்தாபனங்கள் மூலம் நிதி திரட்டி உடனடியாக இவர்களுககு உதவிவழங்க நடவடிக்கை எடுத்துள்ளேன்.

இந்தச் சம்பவத்தை எவராலும் தடுத்திருக்கமுடியாது. இதற்கு ஒருவர் மட்டும் பொறுப்பாளியல்ல, கச்சதீவு யாத்திரிகர்களுக்கு படகுசேவை கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதால் ஏற்படும் அசௌகரியங்களை மக்கள் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்றார்.

உடுப்பிட்டி எம். பி.யும் உப சபாநாயகருமான சிவசிதம்பரம் பேசுகையில், வழக்கத்தில் இப்படியான நிவாரண உதவிகளுக்கு 100 ரூபாவுக்கு குறைந்த வருமானமுள்ள குடும்பங்களுக்கு 200 ரூபாதான் வழங்கபட்டுவருகிறது. இந்தவிபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிதிச்சட்டம்இடமளிக்காவிட்டாலும், விசேட சலுகைகாட்டி கூடிய நிவாரண உதவி வழங்கவேண்டுமெனத்தெரிவித்தார்.

நல்லூர் எம். பி. டாக்டர் நாகநாதன் பேசுகையில், பணஉதவி மட்டும் இவர்களுக்கு ஆறுதலை அளிக்கமாட்டாது. வேலைவாய்ப்பு வழங்கவேண்டுமென்று வற்புறுத்தினர்.

ஊர்காவற்றுறை எம். பி. பேசுகையில், தீவுப்பகுதி படகுச்சேவை மிகவும்மோசமான நிலையிலிருக்கின்றதென்றும் அரசாங்கத்தின் கவனத்துக்கு இதனைக்கொண்டு வந்திருந்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென்றும், யாத்திரிகர்களுக்கு தற்காலிகமாக நல்லபடகு சேவை வழங்க வேண்டுமென்றும் தெரிவித்தார். (மல்லா நிரு)

# படகுகளை பரிசீலனை செய்ய நிபுணர் குழு இன்று வருகிறது

## கச்சதீவு யாத்திரைக்கு சிலபடகுகளே சென்றன

(நமது நிருபர் கு. வி. மகாலிங்கம்)

யாழ்ப்பாணம் புதன்

கச்சதீவு அந்தோனியார் திருநாளில் கலந்துகொள்வதற்காகச் செல்லும் யாத்திரீகர்களை ஏற்றிச செல்லும் படகுகளைப் பரிசிலனை செய்து 'லைசென்ஸ்' வழங்க படகு சம்பந்தமான நிபுணர்குழு இன்று யாழப்பாணம் வருகிறது யாழ.குடாநாட்டில் கச்சதீவுக்குசசெல்வதற்கான துறைகளில் படகுகளைப்பரிசிலனைசெய்துஇக்குழு இன்று 'லைசென்ஸ்'வழங்கும். நேற்று சிலதுறைகளில் இருந்து லைசென்ஸ் பெற்ற சில படகுகளில் குறைந்தளவு யாத்திரீகர்களே சென்றனர்

நேற்று மாலை யாழ்.அரசாங்க செயலகத்தில் நடந்த மகாநாட்டில் கச்சதீவு பிரயாணம் பற்றியும் ராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்

கச்சதீவுக்கு யாத்திரீகர்களை ஏற்றிச்செல்லும் படகுகளை படகுநிபுணர்கள் பரிசோதித்து 'லைசென்ஸ்' வழங்கியபின்னரே அங்கு செல்வதற்கு அனுமதிக்கப்படுவரென்றும். படகோட்டிகள் படகோட்டுவதில் தகைமையுள்ளவர்களா என்பது பரிசீலிக்கப்படுமென்றும் அமைச்சர் ஜே. ஆர். தெரிவித்தார்.

படகுகளில் யாத்திரீகர்களுக்காக பாதுகாப்பு பெல்டுகள் இருக்கவேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

கச்சதீவுக்கு யாத்திரீகர்கள் செல்வதைக் குறைத்துக்கொள்வது நல்லதென்றும் அமைச்சர் குறிப்பிட்டார்

## "ஈழநாடு" பாலைதீவு நிவாரணநிதி

'பாலைதீவு கடலில் பரிதாபமாக மாண்டவர்களின் ஆன்மா சாந்தியடைக! அவர்களைத்திடீரென இழந்து தவிப்பவர்களின் கண்ணீரைத் துடைக்க எங்கள் ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள் அன்புடன்சேர்த்துத் தந்துள்ள ரூ.142யும் இத்துடன் அனுப்பியுள்ளோம். தயவு செய்து இதை நிதியில் சேருங்கள்' என்று யாழ்ப்பாணம் 82, கே.கே.எஸ். வீதியிலுள்ள செ.காசிப்பிள்ளை அன் கோ உரிமையாளர் எழுதுகின்றார்.

சொற்ப சம்பளமுள்ளவர்களும் மனம் இளகி, இந் நிதிக்காக தாங்களே முன்வந்து உதவுகிறார்கள்.

சென்ட் பற்றிக்ஸ் சமூகசேவை லீக் முதல் தவணையாக ரூ 250அளித்துள்ளதாக வண. பிதா.மதுரநாயகம் தெரிவிக்கிறார்.

கல் நெஞ்சையும் உருக்கும் இக்கொடிய விபத்தைப் பற்றி 'ஈழநாடு' பத்திரிகையில் படித்துவிட்டு யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த ஒரு தாய், இதற்குப் பணம் கொடுக்கத் தாம் காத்திருப்பதாகவும், வந்து வாங்கிக்கொள்ளுமாறும்டெலிபோன்மூலம் தெரிவித்தார்.

இந்நிதிக்குப் பணம் அனுப்ப விரும்புபவர்கள் **'பாலைதீவு விபத்து நிவாரணநிதி', 'ஈழநாடு' யாழ்ப்பாணம்**என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க அன்புடன் வேண்டுகிறோம்.

# 54 சடலங்கள் கிடைத்தன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாணத்தைச்சேர்ந்த ஒரு தாய், இதற்குப் பணம் கொடுக்கத் தாம் காத்திருப்பதாகவும், வந்து வாங்கிக்கொள்ளுமாறும்டெலிபோன்மூலம் தெரிவித்தார்.

இந்நிதிக்குப் பணம் அனுப்ப விரும்புபவர்கள் **'பாலைதீவு விபத்து நிவாரணநிதி', 'ஈழநாடு' யாழ்ப்பாணம்**என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க அன்புடன் வேண்டுகிறோம்.

## உதவி வழங்கியோா:

| | |
|---|---|
| நேற்றுவரை கிடைத்த தொகை ரூபா | 1535-00 |
| டாக்டர் எஸ். சண்முகலிங்கம். நாவலர் வீதி யாழ்ப்பாணம் | 100-00 |
| மில்க்வைற் ஸ்தாபனத்தார் | 101-00 |
| இ. சோமலிங்கம் 330 கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணம் | 10-00 |
| எஸ், பாலசுப்பிரமணியம், கற்குளம் பருத்தித்துறை | 10-00 |
| பொ. செல்வரத்தினம், தொல்புரம், சுழிபுரம்: | 10-00 |
| 82, கே.கே. எஸ். வீதி செ. காசிப்பிள்ளை அன் கோ உரிமையாளர் திரு. செ. காசிப்பிள்ளைசேர்த்து அனுப்பியதொகை | 142-00 |

விபரம்

| | |
|---|---|
| செ. காசிப்பிள்ளை | 100-00 |
| சி நல்லதம்பி | 5-00 |
| சு. இராமச்சந்திரன் | 5 00 |
| செ. பொன்னுத்துரை | 2-00 |
| நா. பேரின்பநாயகம் | 5-00 |
| நா. சண்முகலிங்கம் | 5-00 |
| வே. தட்சணாமூர்த்தி | 5-00 |
| ஏ. ஜே. ராஜன் | 5-00 |
| ஆ. ஸ்ரீஸ்கந்தராசா | 5-00 |
| கே செல்வராசா | 2-00 |
| கே. கதிர்காமநாதன் | 1-00 |
| சு. குலேந்திரன் | 2-00 |
| மொத்தம் | 142-00 |

| | |
|---|---|
| சென் பற்றிக்ஸ் சமூகசேவை லீக் | 250-00 |
| திரு ஏ. எல். தம்பிஐயா மூலமாக யாழ். வின்சர் தியேட்டர் | ரூ. 1000-00 |

கச்சதீவு உற்சவத்தை யொட்டி

# 3 ஹெலிகோப்டர்கள்

யாழ்ப்பாணம், வியாழன் பலாலி விமான நிலைய தற்காலிக விமானப்படை முகாமில் மூன்று ஹெலிகாப்டர்களும் இரு விமானங்களும் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன இவைகள் மூலம் புதன் கிழமை தொடங்கி இரவிலும் பகலிலும் கடல் பிராந்தியத்தின் மீது பறந்து சென்று வட்டமிட்டு ரோந்துபுரிதல் நடைபெறுகின்றது. கச்சதீவு உற்சவத்தை முன்னிட்டு இம் மாதம் 9-ம்திகதி வரை இவ்வகையான ரோந்து சுற்றி சட்டவிரோத குடியேற்றம் கள்ளக்கடத்தல் போன்றவற்றைத் தீவிரமாகத் தடுப்பதில் விமானப்படை வீரர்கள் கவனம் செலுத்துவர். இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ள 18 வீரர்கள் இதற்காக நியமிக்கப்பட்டுள்ளனர். திரு. பெர்ணன்டோ இம்முகாமிற்குப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றுகின்றார்(மல் நிரு)

<u>நாகபாம்பு தீண்டியது</u>

# வேலைமுடிந்து வீடுதிரும்பிய இளம் பெண் மரணம்

மட்டுவில், வியா. யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு தனியார் ஸ்தாபனத்தில் கடமைபுரியும் இளம் பெண் ஒருவர் வேலைமுடிந்து பஸ்ஸில் வீடுதிரும்பியதும் மயங்கிவீழ்ந்து மரணமானார். இச்சம்பவம் சாவகச்சேரி நுணாவிலில் நடைபெற்றது.

நாகமுத்து சரஸ்வதிவயது 21 என்பவரின் மரணவிசாரணை நேற்றுநடைபெற்றது வேலைமுடிந்து இரவு 7 மணியளவில் வீடுதிரும்பிய இவர் நாகபாம்பினால் தீண்டப்பட்டதாகவும், விஷக்கடி வைத்தியர்களிடம் சிகிச்சை அளிக்கப்பட்டபோதிலும் அவரைக்காப்பாற்றமுடியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

யாணம் பற்றியும் ராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்

கச்சதீவுக்கு யாத்திரீகர்களை ஏற்றிச்செல்லும் படகுகளை படகுநிபுணர்கள் பரிசோதனை செய்வதுடன் படகோட்டிகள் படகோட்டுவதில் தகைமையுள்ளவர்களா என்பது பரிசீலிக்கப்படுமென்றும் அமைச்சர் ஜே.ஆர். தெரிவித்தார்.

...றும் அவர் தெரிவித்தார்.

கச்சதீவுக்கு யாத்திரீகர்கள் செல்வதைக் குறைத்துக் கொள்வது நல்லதென்றும் அமைச்சர் குறிப்பிட்டார்

# தமிழ்நாடு சட்ட சபையில் கச்சதீவு பிரச்னை

சென்னை, மார்ச் 4 கச்சதீவு யாத்திரை பற்றி இன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

கச்சதீவுக்குத் தமிழ் யாத்திரிகர்கள் போவது பற்றி இலங்கை அரசாங்கம் கட்டுப்பாடுகள் விதிப்பதாகவும் இதுபற்றி விவாதிக்கவேண்டுமென்றும் கோரி காங்கிரஸ் பிரதிநிதி திரு. மாட்டின் ஓர் ஒத்திவைப்புப் பிரேரணை கொண்டுவந்தார்.

கச்சதீவில் நடைபெறும் வருடாந்த பெருநாளுக்குத் தமிழ்நாட்டிலிருந்து கத்தோலிக்க யாத்திரிகர்கள் போவதில் கட்டுப்பாடுகள் விதித்திருப்பது பற்றி ராமநாதபுரம் கலக்டரிடம் விசாரித்தறிந்து மத்திய அரசுடன் தொடர்பு கொள்வதாக முதலமைச்சர் கருணாநிதி சபையில் தெரிவித்தார்.

இதன் பேரில் ஒத்திவைப்புப் பிரேரணைமீது விவாதம் நடத்துவதற்கு சபாநாயகர் அனுமதித்தார்.

பம்பாயில் சிவசேனை இயக்கத்தினர் அங்கு வாழும் தமிழ் இனத்தவர் மீதுதாக்குதல்நடத்தியிருப்பதாகக் கூறி இதுபற்றி சபை விவாதிககவேண்டும் என்று இன்னொரு பிரேரணையும் சபையில் தாக்கல் செய்யப்பட்டது. பம்பாயில் நடைபெற்ற சம்பவங்கள் பற்றி விபரம் கேட்டும், அங்குள்ள தமிழர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும்படி வலியுறுத்தியும் மகாராஷ்டிர முதல்வருக்குத் தாம் கடிதம் எழுதுவதாக முதலமைச்சர் கருணாநிதி உறுதியளித்தயைடுத்து சபாநாயகர் ஒத்திவைப்புப் பிரேரணைக்கு அனுமதித்தார்.

## இன்று

யாழ்ப்பாணம், வியா. வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தின் இரண்டாம் நாள் மகோற்சவதினமாகிய இன்று மாலை 6மணிதொடக்கம் திரு.வி. நல்லையாதிருநாவுக்கரசுநாயனார் சரித்திரம் பற்றி சொற்பொழிவாற்றுவார். காமதேனு வாகன வெள்ளோட்ட விழாவும் நடைபெறும்.

## காந்திக்கிராம கூட்டம்

சுழிபுரம், புதன் தொல்புரம் பாணுவெட்டி காந்திக்கிராம அமைப்புக் கூட்டம் அண்மையில் திரு. சு. கந்தசாமி ஜே. பி. தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் முதலியார் செ. சின்னத்தம்பி, கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. என். நவரத்தினம் உட்படப் பலர் கலந்துகொண்டு பேசினர்.

'லைசென்ஸ்' படகு ஒன்றுமில்லை

# நெடுந்தீவு யாத்திரிகர்கள் அவதி; இராணுவம் ரோந்து

நெடுந்தீவு, புதன் 'லைசென்ஸ்' உள்ள மோட்டார் படகுகள் மட்டுமே கச்சதீவுக்குச் செல்ல முடியுமென அரசாங்கம் அறிவித்தைத் தொடர்ந்து ஏராளமான யாத்திரிகர்கள் நெடுந்தீவிலிருந்து பிரயாணம் செய்ய முடியாமல் இருக்கின்றனர். இங்கு 'லைசென்ஸ்' உள்ள படகுகள் ஒன்றுமே இல்லாததே இதற்குக் காரணமாகும்.

கடந்த 180 வருடங்களாக நெடுந்தீவு மக்கள் கச்சதீவுக்குச் சென்று வருவதாகவும், இவ்வித திடீர் உத்தரவால் அந்தோனியாருக்குச் செலுத்தவேண்டிய கணிக்கையைச் செலுத்த முடியாமல் இருப்பதாகவும் இப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

அரசாங்க மோட்டார் படகுகள் பழுதடையும் போது பிரயாணிகளை வழக்கமாக ஏற்றிச்செல்லும் தனிப்பட்ட இயந்திர வள்ளங்களுக்கு அனுமதி வழங்கி யாத்திரிகர்களின் கஷ்டம் நீக்கப்படவேண்டுமென இப்பகுதி மக்கள் நெடுந்தீவு காரியாதிகாரியிடம் கேட்டுக்கொண்டுள்ளனர். நேற்றுவரை ஒரு படகும் நெடுந்தீவிலிருந்து கச்சதீவுக்குப் புறப்பட்டுச் செல்லவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

## நெடுந்தீவில் இராணுவம்

நெடுந்தீவுக்கும் கச்சதீவுக்குமிடையில் கடற்படைக் கப்பல்கள் ரோந்து நடவடிககைகளில் ஈடுபட்டுள்ளன. ஹெலிகொப்டர் விமானங்களும் ரோந்து புரிந்து வருகின்றன.

நெடுந்தீவில் இராணுவ

(4-ம் பக்கம் பார்க்க)

<u>பாலைதீவுபடகுவிபத்து</u>

# ஆசிரியரை இழந்த மாணவர் கவலை

முல்லைத்தீவு, புதன் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமை செய்தவரும் யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பைச்சேர்ந்தவருமான திரு. அந்தோணிப்பிள்ளை பாலதீவுக்குச் சென்று அகால மரணமடைந்த செய்தி கேட்டு மாணவமாணவிகள் மற்றும் பெற்றோர்கள்கண்கலங்கினர்கள். அன்றையதினம் முல்லைத்திவு மகாவித்தியாலயம் முல்லைத்தீவு றோ க. பெண்பாடசாலை ஆகிய இரு பாடசாலைகளும் மூடப்பட்டு கறுப்புக்கொடிகள் பறக்க விடப்பட்டுருந்தன. நூற்றுக்கணக்கான மாணவ மாணவிகள் அதிபர் ஆசிரியர் சூழ காலம்சென்ற ஆசிரியரின்ஈமச்சடங்குகளில் பங்குபற்றி தங்கள் அஞ்சலியைத் தெரிவித்தனர்.

ஆகியோர் விபத்தில்மாண்டு மக்கள் பொறுத்துக்கொள்ள

# 54 சடலங்கள்கிடைத்தன தப்பியவர்கள் 12 பேர்

## தேடுதல் வேலை கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம், வியாழன் நேற்று முன்தினம் கண்டெடுக்கப்பட்டு குருநகர் துறைமுகத்தில் அடையாளம் காணப்படாமல் வைக்கப்பட்டிருந்த 3 சடலங்களில் இரு சடலங்கள் அடையாளம் காட்டப்பட்டது. பாலைதீவுக் கடலில் விபத்துக்குள்ளாகி பலியானவர்களின் 53 சடலங்கள் இதுவரை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது ஒரு சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் குருநகர் துறைமுகத்தில் இருக்கிறது.

# 7 பேரின்சடலம்இல்லை

இதுவரை 7 பேரைக் காணவில்லையென பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் கடலுக்கு பலியாகியிருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது. பெயர் விபரம் வருமாறு:–

சரவணமுத்து தேவராசா, வேலனை மேற்கு; ராஜதுரை பூபதி, அரியாலை மேற்கு; ரத்தினசபாபதிதில்லைநாதன் மாரிசன்கூடல்; வேலுப்பிள்ளை செட்டி, கொழும்புத்துறை; அன்ரனி பெர்ணுட் பாணம் கோட்டை; நாகேந்திரராசா மாரிமுத்து செட்டி (வயது 49) மன்னார்; பி. தில்லையம்பலம், மாரிசன்கூடல்.

## தேடுதல் நின்றது

விபத்தில் சிக்கி பலியானவர்களைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டிருந்த பொலிஸ், சுங்க, கடற்படை கப்பல்கள் திரும்பிவிட்டனா. தொடர்ந்து தேடுதல் நடைபெற மாட்டாதென்றும், சடலங்கள் கரை ஓரங்களில் ஒதுங்குகின்றனவாஎன்பதை அவதானித்துக் கொள்ளும்படியும் சகல பொலிஸ் நிலையங்களுக்கும், கிராம சேவையாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இளவாலையைச் சேர்ந்த இரத்தினசபாபதி தில்லைநாதன் (வயது 20), பூநகரி

(4-ம் பக்கம் பார்க்க)

வடபகுதி அசைஸ் விசாரணை

# "எதிரிகள் நால்வரையும் சரியாக அடையாளம் கண்டுகொண்டேன்"

## சண்டிலிப்பாய் கொலை; தீ வைப்பு வழக்கு

யாழ்ப்பாணம், வியா. 'எதிரிகள் யாருடனுவது எனக்கு கோபமில்லை. அவர்களுக்கும் என் மீது கோபமில்லை. உறவு நல்லதாக இருந்தது. எதிரிகளை 20வருடங்களாகத் தெரியும் அவர்களுடன் சந்தோஷமாகவே இருந்தேன். எதிரிகளையும் சுற்றத்தாரையும் எனக்குத் தெரியும்'.

சண்டிலிப்பாய் கொலை, தீவைப்பு வழக்கில் 6 எதிரிகள் சார்பில்ஆஜரான அட்வகேட் என். சத்தியேந்திரா குறுக்கு விசாரணை செய்தபோது சாட்சியமளித்த வல்லி அண்ணுமலை மேற்கண்டவாறு கூறினுர்.

இவ்வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் கலாநிதி சி. ஜி. வீரமந்திரி முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் சண்டிலிப்பாயில் 68-ம் ஆண்டு ஜுன் மாதம் 4ந் தேதி கந்தையா நாகராசா, சங்கரப்பிள்ளை திருவாதிரை, சரவணமுத்து அப்புராசா, முத்தையா தர்மலிங்கம், ஆறுமுகம் பொன்னுத்துரை, நல்லதம்பி துரைராஜா அல்லது துரையன், சுப்பிரமணியம் துரைராஜா ஆகியோர் மீது பொதுநோக்கத்துடன் சட்டவிரோதமாக கூட்டம் கூடியதாகவும், தீவைத்ததாகவும். கணபதி வைத்தி என்பவரைக் கொலைசெய்ததாகவும் மொத்தம் 3குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

விசாரணையைப் பார்ப்பதற்காக கல்லூரி மாணவிகள் உட்பட கோர்ட்டின் உள்ளேயும் வெளியேயும் ஏராளமானேர் திரண்டிருந்தனர்.

1ம், 2ம், 3ம், 5ம், 6ம், 7ம் எதிரிகள் சார்பில்அட்வகேட் என். சத்தியேந்திரா, அட்வகேட் ராஜராஜேஸ்வரன் தங்கராசா, அட்வகேட் எஸ். சிவடாக்கியநாதன்ஆகியோரின்உதவியுடனும் புறக்டர் எம். சிற்றம்பலத்தின் அனுசரணையுடனும் ஆஜரானுர். 4-ம் எதிரி சார்பில் அட்வகேட் வி. ஜெகஜோதி, புறக்டர் எம். சிற்றம்பலத்தின் அனுசரணையுடன் ஆஜரானுர். எதிரிகளுக்காக அரசாங்கத்தால் அட்வகேட் ஏ. முத்துக்கிருஷ்ணன் நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் அட்வகேட் எல். டி. குருசாமிஆஜராணுர்.

அண்ணுமலை சாட்சியமளிக்கையில், சம்பவம் நடந்த தினம் 4 எதிரிகளையும் சரி

(4-ம் பக்கம் பார்க்க)

## ஹெலிகோப்டரில் வந்து இறங்கினர்

யாழ்ப்பாணம், வியாழன் ராஜாங்க அவைச்சர் திரு. ஜே ஆர் ஜெயவர்த்தனு பாலைதீவு படகு விபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுககு நேரில் அனுதாபம் தெரிவிப்பதற்காக நேற்று மாலை 5 மணிக்கு விசேஷ ஹெலிக்கோப்டர் விமான மூலம் யாழ்ப்பாணம் விளையாட்டரங்கை வந்தடைந்தார், இவருடன் நிரந்தர காரியதரிசி திரு. ஆனந்த திஸ்ஸ டீ அல்விஸ்சும் வந்திருந்தார்.

அமைச்சரைமுதலில் மாவட்ட அரசாங்க அதிபர் திரு பீட்டர்ஸ் கைகுலுக்கி வரவேற்றுர். இதைத் தொடர்ந்து மாநகரசபை முதல்வர் திரு. ரி. எஸ். துரைராசா அமைச்சரை வரவேற்றுர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிவிளம்பரம்

## விற்பனைக்கு

**காணி:**

சாவகச்சேரி போஸ்ரபிஸ் ரோட் 1-ம் மைல் பஸ் போக்குவரத்துண்டு. 6 1/2 பரப்பு பிரித்தும் கொடுக்கப்படும். சராசரி பரப்பு விலை 3000 ரூபா. மா, பலா, தென்னை போதிய வருமானம். 2 குடி இருக்கலாம். 2 கிணறு, கல்வீடு, ஒரு அறை. 2 அறை குசினி (கல்) மிகுதி நேரில். உரிமையாளர், நாகலிங்கம் திருநாவுக்கரசு, சாவகச்சேரி வடக்கு, (கிராம்புவில்), சாவகச்சேரி. 1902

2 பரப்பு குடி நிலம், பிரயோசனத்துடன், 91/A, பிரவுண்வீதி, யாழ்ப்பாணம். தொடர்பு: இராசரத்தினம், வழக்கறிஞர், சிவப்பிரகாசம் ரோட்டு, வண்ணார் பண்ணை. 1900

## தேவை

75 கில்லோ வாட்ஸ் நைசனல் மின்சார டீசல் எஞ்சின் இயக்குவதற்கு அனுபவமுள்ள ஒருவரும் கணக்காளர் (காஷியர்) ஒருவரும் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். சென். பீற்றஸ் ஐஸ் பக்ரறி. முல்லைத்தீவு. 1903

அளவெட்டி
ப. நோ. கூ. சங்கம்

## லொறி உடற் கோப்பு வேலைக்கான கேள்வி விண்ணப்பம்

மேற்படி சங்கத்தின் லொறி ஒன்றிற்கு (Isuzu model TXD-30) உடற் கோப்பு வேலை செய்வதற்கு (Hood Carrier, Painting உட்பட) இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

முழு வேலைக்கும் (தேவையான பொருட்கள் உட்பட) கோரப்படும் தொகையையும்,

தேவையான பொருள்கள் சங்கத்தால் வழங்கப்பட்டால் கோரப்படும் கூலித்தொகையையும்தனித் தனி குறிப்பிடவேண்டும்.

1. வேலை முழுவதும் சங்க வளவிலேயே நடைபெறவேண்டும்.
2. வைப்புப் பணமாக ரூபா 500/- கட்டப்பட வேண்டும்.
3. விண்ணப்பங்கள் சீலிடப்பட்ட உறைகளில் கேள்விப்பத்திர விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு தலைவர், ப. நோ. கூ. சங்கம், அளவெட்டி என்ற முகவரிக்கு 15-3-70க்குப் பிந்தாது அனுப்பப்படவேண்டும்.

ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டு ஒரு மாதத்தில் லொறி கையளிக்கப்படவேண்டும்.

முகாமையாளர்,
ப. நோ. கூ. சங்கம்
1975 அளவெட்டி.

## விளம்பரம்

இச்சமாசத்திற்கு ஒரு முக்கிய கணக்குப் பதிவாளர் தேவைப்படுகிறது. இதன் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் தகைமையுடையவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பஞ் செய்யலாம். விண்ணப்பங்கள் பதிவுத்தபால் மூலம் 15-3-70க்குள் அனுப்பி வைக்கப்படவேண்டும்.

வேதனக் கிரமம்
ரூபா 180/- — ரூபா 280/-
10 X 10

தகைமைக்கு ஏற்றவாறு ஆரம்பச்சம்பளம் உயர்த்தப்படவும் கூடும்.

பிணை: ரொக்கம் ரூபா 1000/-

ஆதனம் ரூபா 2000/-

தகைமைகள்: 30 வயதுக்குக் குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலுமிருக்க வேண்டும்.

கூட்டுறவு உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்றவர்கள் அல்லது

கூட்டுறவு ஸ்தாபனங்களிலோ, கூட்டுத்தாபனங்களிலோ, அரசாங்கத்திலோ கணக்குச் சம்பந்தமாக 10 வருட அனுபவம் நிறைந்தவர்கள் அல்லது

பொதுக் கல்வித் தராதரப் பத்திரப் பரீட்சை (சாதாரண பிரிவு) சித்தியுடன் 10 வருட வியாபார அனுபவம் பெற்றவர்கள் அல்லது பட்டதாரிகள் விண்ணப்பஞ் செய்யலாம்.

ஆ. கந்தையா,
கௌரவ காரியதரிசி,
1-3-70.

புலோலி ப. நோ. கூ. ச. சமாசம்,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை. 1971

## அறிவித்தல்

எமது ஸ்தாபனத்தில் கடமையாற்றிய நடேசர் கணேசலிங்கம் என்பவர் விலகிக்கொண்டார். தயவு செய்து எமது ஸ்தாபனம் சம்பந்தமாக எந்தவிதமான தொடர்புகளும் செய்து கொள்ள வேண்டாமென அன்புடன் வேண்டுகின்றோம்.

சாமி அன் சன்ஸ்,
161, கே. கே. எஸ். ரோட்,
1977 யாழ்ப்பாணம்.


# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**வியாழன் 5—3—70**

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற் சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலைய ஒலிப் பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதங்கள், 8-30 செய்திச் சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 தொழிலாளர் கேட்டவை, 1-00 கதம்ப இசை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச் சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 நாளைய சந்ததி.

இரவு 6-15 வயலினிசை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச் சுருக்கம், 7-03 கிராமசஞ்சிகை, 7-15 வயலின், 7-45 ஐ. நா. சித்திரம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 கர்னாடகஇசை, 10-30 செய்திச் சுருக்கம்.

# இன்றைய பலன்

மாசிமாதம் 22-ம் திகதி [5-3-70]

**சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை**

**மேஷம்-** அறிவுப்பசிக்கு இன்று தாராளமாக விருந்து கிடைக்கும். வாகனசுகத்துடன் வாழ்க்கை நலனும் உண்டு.

**ரிஷபம்-** மக்களால் மகிழ்ச்சி. புதுமையில் நாட்டம். முதியவர் ஒருவர் உங்களுக்கு நல்வழிகாட்டுவார்.

**மிதுனம்-** வெளியிடத்துப்பயணம் மேற்கொள்ளப்படலாம். உடல்நலத்தைப்பேணவும் பகைமூட்டம் தோன்றும் பதட்டமும் உடன் சேரும்.

**கடகம்-** குடும்பத்தில் பிணி மனதிலே சுமை அதிகமாகும்.

**சிம்மம்-** கடமையில் தடை ஏற்படும். பிறர் நம்பிக்கையைத் தவிர்க்கவும். தீர்க்கமான சிந்தனையே சிறப்பைத் தரும்.

**கன்னி-** வெல்லம்போல் இனிக்கும் வாழ்க்கை. இனபந்துக்களின் ஆதரவும் கிடைக்கும். எதிர்பார்த்த வரவிலும் திருப்தி ஏற்படும்

**துலாம்-** கடமையில் முதலிடம் கிடைக்கும். பதவியில் உயர்வுக்கும் இடமுண்டு. வியாபாரத்துறையில் தொடர்புகள் பெருகும்.

**விருச்சிகம்-** சீறிவரும்கோபம் உங்களை நிலைதடுமாற வைக்கும். தானிய நஷ்டத்துக்கும் இடமுண்டு. அடக்கமும் செலவினங்களைத் கட்டுப்படுத்தும் தன்மையும் வேண்டும்.

**தனுசு-** வாழ்க்கையில் புதிரான நிலை தென்படும் எதிலும் தாக்கமனப்பான்மை உருவாகும். சிநேகிதர் வழியால் கவலைகள் தோன்றக்கூடும். விவசாயிகளாயின் ஏமாற்றத்திற்கு இடமுண்டு,

**மகரம்-** எதிலும் விரக்திமனப்பான்மை தென்படும். எதிர்பார்த்த முடிவுகளில் ஏமாற்றம் உருவாகலாம். உடல்நலம் பாதிக்கப்படலாம். பொருளும் செலவாகும்.

**கும்பம்-** போதுமென்ற மனத்துடன் இருப்பீர்கள் முதியவர் ஒருவரின் அறிவுரை உங்களுக்குப் புதியபாதையைக் காட்டும், குடும்பத்திலும் அன்பு தவழும்.

**மீனம்-** கடந்தகால எண்ணங்கள் அலைமோதும். அடுத்துக்கெடுப்பதற்கு சிலர் முனைவர். சகோதரவழியால் சஞ்சலப்படக்கூடிய செய்திக்கும் இடமுண்டு.


# ‘வலிகோப்டெக்ஸ்’

தயாரிப்புகள்

**தரமான சாறிகள், சட்டை, பாவாடை, காற்சட்டை, சேட் துணி வகைகளும், பட்டு வேட்டி, சால்வைகளும்**

எமது
திருக்கேதீஸ்வரம்
விசேஷ விற்பனை நிலையத்தில்
பெற்றுக்கொள்ளலாம்.

**வலி. மேற்கு
ப. நோ. கூ. ச. சமாஜம்
சங்கானை**

தொலைபேசி: மானிப்பாய்: 325


# ‘உரும்பராய் தபால் நிலைய கஷ்டம் நீக்கப்பட வேண்டும்

உரும்பராய், புதன்

உரும்பராய் தபால் நிலையத்தில் தற்போது தபால் கட்டப்படும் நேரத்தை மாற்றி பி. ப. 5-45 மணிக்கு கட்டவேண்டும் என்று கோரும் மகஜரொன்றை தமிழரசுக்கட்சி வாலிபமுன்னணி உரும்பராய் கிளை அஞ்சல் திணைக்கள மா அதிபருக்கு அனுப்பியுள்ளது. இணுவில் புகையிரத நிலையத்துக்கு மாலை 6-33 மணிக்கேதபால்வண்டி வருவதால் இவ்வித வசதி செய்து கொடுக்கப்பட வேண்டுமென இவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

1968 நவம்பர் மாதம் தரம் உயர்த்தப்பட்ட உரும்பராய் தபால் நிலையம் முன்னர் உபதபால் நிலையம் இயங்கி வந்தது மாதிரியே இயங்கி வருகிறது, இது மாற்றப்பட்டு காலை 7 மணி தொடக்கம் மாலை 8 மணி வரை இயங்கச் செய்து தந்தி தொலைபேசி வசதி செய்து தரப்படவேண்டும். தபால் நிலைய விறுந்தையில் தொலைபேசிஇரகசியக்கூடம் ஒன்று அமைக்கப்பட வேண்டும். கூடியதொகை பெறுமதியான காசுக்கட்டளை மாற்றவும் இங்கு ஒழுங்கு செய்யவேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது

தற்போது அன்னங்கை கோண்டாவில் அஞ்சல் நிலையம், காந்தன் நீர்வேலி அஞ்சல் நிலையம் ஊரெழு சுன்னாகம் முதலிய தபால் நிலையங்

## கரபந்தாட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய மைதானத்தில் இம்மாதம் 7-ம், 8-ம் திகதிகளில் நடைபெறவிருந்த உள்ளூராட்சி அமைச்சின் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டங்கள் 14-ம், 15-ம் திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன. இவ் ஆட்டத்தில் தாவடி சனசமூக நிலையம், வசாவிளான் ஞான வைரவர் சனசமூக நிலையம், நவாலி சனசமூக நிலையம், கரம்பன் ஆனந்தா சனசமூக நிலையம், உடுப்பிட்டி நாவலர் சனசமூக நிலையம், புத்தூர் வளர்மதி சனசமூக நிலையம் ஆகிய ஆறு கோஷ்டிகள் கலந்து கொள்கின்றன.

(மல் நிரு)

— —

## இ.போ.ச. டெக்கர் மோதல்கள்

மீசாலை, புதன்

தெமட்டக்கொடைச் சந்தியில் இலங்கைப் போக்குவரத்துச்சபை இரட்டைத் தட்டு பஸ் ஒன்று தேங்காய் வண்டியொன்றுடன் மோதியதால் தேங்காய் வண்டி


# முக்கிய அறிவித்தல்

எதிர்வரும் (6-3-70) மகாசிவராத்திரியன்று திருக்கேதீஸ்வரத்தில் எங்கள் விற்பனை வானில் மில்க்வைற் தயாரிப்புகளை வாங்கும் அன்பர்களுக்கு கீழ்க்காணும் பெறுமதி மிக்க பொருட்கள் அன்பளிப்பாக வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

அன்பளிப்புகள்:

1. சிவபுராணம் (உரையுடன்)
2. திருக்கேதீஸ்வர வரலாறும் தேவாரப் பதிகங்களும்
3. பொக்கற் கலண்டர்
4. டெஸ்க் கலண்டர்

இன்னும் அநேக வெகுமதிப் பொருட்கள், ஒரு பிளாஸ்டிக் பையுடன் வழங்கப்படும்.

**மில்க்வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்**


## சுற்றுலா

கோப்பாய், புதன்

கோப்பாய் நாவலர் பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் சரித்திரச்சுற்றுலாவொன்றை மேற்கொண்டு வடபகுதியில்வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப்பார்வையிட்டனர்.

— —

## பொது மையவாடி

முசலி, புதன்

முசலி வடக்கு கிராம சபை பொது மையவாடி ஒன்றை பெரிய புளளச்சி பொற்கேணியில் அமைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளது.


## வெஸ்லி சினிமா

மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
சனிபோயா, போயா 2-30 மணி
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நடித்த

**பெற்றால்தான் பிள்ளையா**

இத்துடன் சென்னையில் நடைபெற்ற 2-வது அனைத்துலக [illegible] மகாநாடும் [illegible] பிக்கப்படும்.


கோப்பாய்வட்டாரம்

# உடற்பயிற்சிப் போட்டி

கோப்பாய், புதன்

கோப்பாய் வட்டாரப் பாடசாலைகளின் இவ்வருட உடற்பயிற்சிப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள் விபரம் வருமாறு:

ஆண்கள் கீழ்ப்பிரிவு ‘ஏ’: நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி, அச்சுவேலி கிறிஸ்தவ கல்லூரி, புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி.

ஆண்கள் மத்திய பிரிவு ‘ஏ’: உரும்பிராய் இந்துக் கல்லூரி, அத்தியார் இந்துக் கல்லூரி, சோமஸ்கந்த கல்லூரி.

ஆண்கள் மேல் பிரிவு ‘ஏ’: வசாவிளான் மகாவித்தியாலயம்.

பெண்கள் கீழ்ப்பிரிவு ‘ஏ’: நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி.

பெண்கள் மத்திய பிரிவு ‘ஏ’: கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரி, உரும்பராய் இந்துக் கல்லூரி, நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூ

## முடிவுகள்

கோப்பாய் வட்டார கனிஷ்ட பாடசாலைகளினதும், கனிஷ்ட பிரிவுகளினதும், ஆசிரியர்களினதும் மெய்வல்லுனர் போட்டி மார்ச் மாதம் 9-ம், 10-ம் திகதிகளில் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி விளையாட்டு முன்றிலில் மாவட்டக் கல்வி ஆலோசகர் திரு. ஆர். திருநாவுக்கரசுவைப் பிரதம விருந்தினராகக் கொண்டு நடைபெற விருக்கின்றன. ஆசிரியர்கள் அநேகர் இவ்வருடப் போட்டியில் கலந்துகொள்ளவிருக்கின்றனர்.


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க



நீங்கள் வீடு கட்டும் பொழுது


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பிள்ளையா

இத்துடன் சென்னையில் நடைபெற்ற 2-வது அனைத்துலக தமிழ் ஆராய்ச்சி மகாநாடும் கலரில் கண்பிக்கப்படும்.

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி.

பெண்கள் மத்திய பிரிவு 'ஏ': கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரி, உரும்பராய் இந்துக் கல்லூரி, நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி.

செய்யவேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது

தற்போது அன்னங்கை கோண்டாவில் அஞ்சல் நிலையம், காந்தன் நீர்வேலி அஞ்சல் நிலையம் ஊரெழு சுன்னுகம் முதலிய தபால் நிலையங்கள் மூலம் உரும்பராய்ப் பகுதிக்கு விநியோகிக்கப்படும் தபால் உரும்பராய் தபால் நிலையம் மூலம் விநியோகிக்கப்பட வேண்டும் என்றும் வாலிப முன்னணி கேட்டுள்ளது.

...மீதோட்டமுல்லை, புதுச் செமட்டக்கோடைச் சந்தியில் இலங்கைப் போக்குவரத்துச்சபை இரட்டைத் தட்டு பஸ் ஒன்று தேங்காய் வண்டியொன்றுடன் மோதியதால் தேங்காய் வண்டி வடிகாலுக்குள் தூக்கி வீசப்பட்டது.


வண்டிக்காரர் தெய்வாதீனமாக உயிர் தப்பிய போதும் தூக்கி வீசப்பட்ட வண்டி வழிப்போக்கர் ஒருவரைப் படுகாயப்படுத்தியது. வழிப்போக்கர் உடனடியாக கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

சமீபத்தில் மருதானையில் திடீர் என வீதியைக் கடக்க முயற்சித்த ஒரு வயோதிபரை தெஹிவளையில் இருந்துவந்த இலங்கைப்போக்குவரத்துச் சபையின் இரட்டைத்தட்டு பஸ் ஒன்று மோதியதால் கால் முறிந்து ரெத்தவெள்ளத்தில் கிடந்த இம்முதியவருக்கு முதல் உதவிசெய்ய யாரும்முன்வரவில்லையாகிலும் அந்த பஸ் கொண்டக்டர்கள் அவரை உடனடியாக கொழும்பு பெரியாஸ்பதிரியில் சேர்ப்பித்தனர். (விநி)


# நீங்கள் வீடு கட்டும் பொழுது
# ஒட்டுப் பலகை கதவுகளை பாவித்து

விலையை 40% குறைக்கவும்

விலை ரூபா 60/- தொடக்கம் ரூபா 156/- வரையாகும்.



☐ ஒட்டுப் பலகை கதவுகள் பாரம் குறைந்ததை, நீண்ட காலம் பாவிக்கக் கூடியவை, எழில் மிக்கவை. இலகுவில் பொருத்த கூடியவை. புல்ரக மரங்களில் தேர்ந்தெடுத்து உற்பத்தி செய்யப்பட்டவை. கிரிகம்பலிகை, கூலண்கிக், சற்றின் ஆகிய ஆடம்பர ரகங்களிலும் சாதாரண ரகங்களிலும் கிடைக்கும்.

☐ கதவுகள் பின் குறிப்பிட்ட அளவுகளில் விநியோகிக்கப்படும்:

உயரம் : 6' 9''
அகலம் : 2' 3'', 2' 9'', 3' 6''
கனம் : 1¼''

☐ விட்டத்திற்கு உபயோகிக்கப்படுகிற மரம் நீண்டகால உழைப்பிற்காக சிறந்த முறையில் பதப்படுத்தப்பட்டவையாகும்.

உற்பத்திக்கு உபயோகிக்கப்பட்ட பசை ஈரத் தன்மையை எதிர்க்கும் வன்மையுடையது.

**இக்கதவுகள் பாவனையாளருக்கு உடனடியாக விற்பனைக்கு கிடைக்கும்.**

இலங்கை
ஒட்டுப்பலகை கூட்டுத்தாபனம்
நிர்: 18, பலாலி வீதிச் சந்தி,
ஆரியகுளம், யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 508.

இலங்கை
ஒட்டுப்பலகை கூட்டுத்தாபனம்
420, பௌத்தலோக மாவத்தை
கொழும்பு 7.
தொலைபேசி: 95846, 92903

THUNDERFLASH



வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க



உங்களை மகிழ்விக்க பவனி வருகிறார்கள்
எம். ஜி. ஆர் ஜெயலலிதா
## காதல் வாகனம்
வின்ஸரில்
தினசரி 4 காட்சிகள்



## ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30 9-30
பிறிப்போயா, போயா 2-30 மணி
எம்.ஜி.ஆர். - சரோஜாதேவி
நடித்த
## ஆசைமுகம்



வல்வெட்டித்துறை
## ரஞ்சனா தியேட்டர்
தினசரி: 6-30, 9-30
சிவாஜி - பத்மினி - ராமராவ்
நடித்த
## சம்பூரண ராமாயணம்



## MANOHARA
JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m.
HELGA
The most revealing Sex education Film ever released
(Strictly for adults only)
கருவுற்பத்தி முதல் பிரசவம் வரையில் இதுவரை திரைக்கு அனுமதிக்கப்படாத பல சம்பவங்களை புதிய சாதனைக் கருவிமூலம் வெளிப்படுத்திக் காட்டும் பிரசவ சித்திரம்.
ஹெல்கா
(கட்டாயமாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)



ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
அசோகன் - சோ - சந்திரபாபு
நடித்த
## அடிமைப் பெண்



## REGAL
JAFFNA
Daily 4-15, 7 & 9-45 p.m.
Poya, Prepoya 4 Shows
Tony Franciosa and Anjanette Comer
in
IN ENEMY COUNTRY
(Technicolor)



வெற்றிகரமான 2 வது மாதம்
கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
## வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்ற வெற்றிச்சித்திரம்





சிவாஜிகணேசன் பத்மினி
பாலையா
நாகேஷ்
நம்பியார்
ஏ.வி.எம். ராஜன்
மனோரமா
மற்றும்பலர் நடித்த



சிவாஜிகணேசன் அளிக்கும்

ஸ்ரீ விஜயலக்ஷ்மி பிக்சர்ஸ்
## தில்லானா மோகனாம்பாள்
A.P. நாகராஜன்



மகா சிவராத்திரியை முன்னிட்டு எஸ், ரி. ஆர். பிலிம்ஸ் மகிழ்ச்சியுடன் வெளியிடும் சிறந்த படைப்பு
## ராஜா யாழ்ப்பாணம்
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-45 மணி.
போயாவுக்கு முன்தினம், போயா தினம் காலை 10-30 மணி.
6ந் திகதி மகா சிவராத்திரியை முன்னிட்டு நள்ளிரவுக் காட்சி 1-30 மணிக்கு
நாடும் — ஏடும் — நற்றமிழர் வீடும் — போற்றிப் புகழும் தீந்தமிழ்த் திரைக் காவியம்!
கொடுத்த வாக்குறுதிக்காகக் கொண்டவளையும், பெற்ற அன்புச் செல்வனையும் நடுத் தெருவில் விற்ற மாமன்னன் ஹரிச்சந்திரன் மேன்மை காண வாரீர்!

சிவாஜி கணேசன்
எம். என். நம்பியார்
ரி எஸ். பாலையா
தங்கவேலு
மாஸ்டர் ஆனந்தன்
ஜி. வரலெட்சுமி
முத்துலட்சுமி
மோஹனா, கனகஸ்ரீ
மற்றும் பலர் நடித்த




# ஹரிச்சந்திரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ரொடீஷியாவைக் கண்டிக்கும்

# ஐ. நா. பாதுகாப்புசபைக் கூட்டம் ஒரு நாள் பின்போடப்பட்டது

## ஆபிரிக்க நாடுகளின் ஆலோசனைக்கு அவகாசம்

நியூயோர்க், மார்ச் 4

**பிரிட்டன் விடுத்த அழைப்பின் பேரில் இன்று நடைபெறவிருந்த ஐ. நா. பாதுகாப்புச் சபைக்கூட்டம் நாளை வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.**

ரொடீஷியா தன்னை குடியரசாகப் பிரகடனப்படுத்திக்கொண்டிருப்பதைக் கண்டிப்பதற்காக ஐ. நா. பாதுகாப்புச்சபையை இன்று கூடும்படி பிரிட்டன் கேட்டிருந்தது. இவ்விஷயம் சம்பந்தமாக ஆபிரிக்கநாடுகள் ஆலோசனைகள் நடத்துவதற்கு அவகாசம் அளிக்கும் விதத்தில் இன்று நடைபெறவிருந்த கூட்டம் பின்போடப்பட்டுள்ளது.

ரொடீஷியா தன்னைகுடியரசாகப் பிரகடனப்படுத்திக் கொண்டதன் விளைவாக எழுந்துள்ள நிலைமை குறித்து விவாதித்து நடவடிக்கை எடுப்பது சம்பந்தமாக ஆலோசிக்க பாதுகாப்புச்சபையைக் கூட்டும்படி ஐ. நா. பொதுச் செயலாளர் யுதாண்ட் அழைப்பு விடுத்திருந்தார். அதைத் தொடர்ந்து பாதுகாப்புச்சபை கூட வேண்டுமென்று பிரிட்டனும் கோரிக்கை விடுத்தது. ரொடீஷியா தன்னை குடியரசாகப் பிரகடனப்படுத்திக் கொண்டதைக் கண்டிப்பதற்காக பாதுகாப்புச்சபை கூடவேண்டுமென்று பிரிட்டன் கேட்டிருந்தது.

ரொடீஷியாவுடன் ராஜீய உறவு கொண்டுள்ள எல்லா நாடுகளும் அதைக் கைவிட வேண்டுமென்றும், பொருளாதார நிர்ப்பந்தத்தைத் தீவிரப்படுத்த வேண்டும் என்றும் பிரிட்டன் வலியுறுத்தியிருந்தது. என்றாலும் ரொடீஷியா மீது ராணுவ நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற ஆபிரிக்க நாடுகளின் கோரிக்கையை பிரிட்டன் முற்றாக மறுத்துவிட்டது.

ரொடீஷியா மீது கண்டனம் தெரிவிப்பதற்காக பாதுகாப்புச் சபை கூடுவதற்கு முன் இதுபற்றி தங்கள் நிலைமையைத் தெளிவுபடுத்திக்கொள்வதற்கு அவகாசம் அளிக்கும்படி ஆபிரிக்க நாடுகளின் சார்பில் புருண்டி நாட்டின் பிரதிநிதி கேட்டிருந்தார். இக்கோரிக்கையை அங்கத்தவ நாடுகள் ஏற்றுக்கொண்டு கூட்டத்தை நாளைய தினத்திற்கு ஒத்திவைத்துள்ளன. புருண்டி, சியாலியோன், சாம்பியா ஆகிய ஆபிரிக்க நாடுகள் இன்று தனியே கூடி ஆலோசனைகள் நடத்துகின்றன.

அடிஸ் அபாபாவில் கூடிய ஆபிரிக்க நாடுகளின் ஒற்றுமை ஸ்தாபன வெளிநாட்டமைச்சர்கள் ரொடீஷியா மீது பலாத்காரப் பிரயோகிக்கும்படி பிரிட்டனை வற்புறுத்துமாறு ஐ. நா. பாதுகாப்புச்சபையைக் கோரியுள்ளன. ரொடீஷியாவுக்கு பிரிட்டன் ஆதரவளிப்பதாக இந்த ஆபிரிக்க நாடுகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

ரொடீஷியா மீது நடவடிக்கை எடுக்க பிரிட்டன் தயங்குமானால் ஐ நா தனது படைகளைப்பாவித்து ரொடீஷியாவில் சிறுபான்மை வெள்ளையர் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்று கோரியிருக்கின்றன.

### லெஸ்டர் கண்டனம்

ரொடீஷியா சம்பந்தமாக பிரிட்டன் ஐ.நா. பாதுகாப்புச்சபையின் தயவை நாடியிருப்பது கேவலமான செயல் என்று தென்னபிரிக்கப் பிரதம மந்திரி திரு. லெஸ்டர் கண்டித்திருக்கிறார். டர்பனில் பத்திரிகை நிருபர்களிடம் பேசிய அவர் குடியரசாகும் விஷயம் ரொடீஷியாவின் சொந்த விஷயம். ரொடீஷியாவுடனான தென்னபிரிக்க உறவுகள் எப்பொழுதும் போல தொடர்ந்திருக்குமென்றார்.

## மொழிப்பிரச்னையில்

---

அமெரிக்காவில்

## மிகப்பெரிய ரயில்வே வேலை நிறுத்தம்?

நியுயோர்க், மார்ச் 4

அமெரிக்காவில் இன்றிரவு நடைபெறவிருக்கும் மிகப்பெரிய ரயில்வே வேலைநிறுத்தம் ஒன்றை தவிர்ப்பதற்காக அதிபர் நிக்சன் தீவிர நடவடிக்கைகள் எடுப்பதில் முனைந்திருக்கிறார்.

ரயில்வே தொழிலாளர் யூனியன்களுக்கும் அரசாங்கத்துக்குமிடையில் இரண்டு ஆண்டு காலமாக நடைமுறையில் இருந்துவந்த ஒப்பந்தம் ஒன்று முறிந்து போனதன் காரணமாக இந்த வேலைநிறுத்தம் இடம்பெறவிருக்கின்றது. சுமார் 200க்கு மேற்பட்ட ரயில் பாதைகள் இந்த வேலைநிறுத்தத்தால் பாதிக்கப்படவிருக்கின்றன.

இந்த வேலைநிறுத்தத்தை தவிர்ப்பதற்கான ஒரு மசோதாவை ஏற்கும்படி காங்கிரஸ்சபை அதிபர் நிக்சன் கேட்டிருக்கிறார்.

## "மாணவர்களுக்கே பல்கலைக்கழகம் அரசியல்வாதிகளுக்கல்ல"

— உப சபாநாயகர்

உடுப்பிட்டி, புதன்

"தமிழ் மக்களுக்கு ஒரு பல்கலைக் கழகம் அவசியம் தேவை நாம் ஒற்றுமையாக இயங்காவிட்டால் இப் பல்கலைக்கழகம் எமக்குக் கிடைக்காமல் போய் விடும் தமிரசு தமிழ்க் காங்கிரஸ் கட்சிகள் ஒரே குரலெழுப்பினால்தமிழருக்கு பல்கலைக் கழகம் சட்டாயம் கிடைக்கும்."

மேற்கண்டவாறு உபசபாநாயகரும் உடுப்பிட்டி எம்பியுமான திரு மு சிவசிதம்பரம் கரணவாய் மேற்கு மூத்தவிநாயகர் கோவிலடி மயிலியாவளவு பகுதியில் கிராமநலசேவா சங்கத்தினர் [illegible] பணம் [illegible] வைபவத்தில் சுட்டிக்காட்டி

கஷ்டங்கள் கொஞ்சமல்ல. யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகம் அமைத்தால் வீட்டிலிருந்தே பட்டதாரியாகலாம். திருமலையில் பல்கலைக்கழகம் வேண்டாம் என்று நாம் கூறவில்லை. இன்னும் 10 ஆண்டுகளில் திருமலையில் பல்கலைக் கழகம் நிறுவவேண்டியது அவசியம் ஏற்படும்.

மேலைநாடுகளில் ஒருகட்சிக்கு ஒருதடவையே பொதுமக்கள் சந்தர்ப்பம் கொடுப்பார்கள். அக்கட்சி தனது கடமையிலிருந்து தவறிவிட்டால் மறுதடவை மற்றக் கட்சிக்குச் சந்தர்ப்பம் கொடுப்பார்கள் இதுபோல் இலங்கையிலும் தமிழ்க்காங்கிரஸ்கட்சிக்கும்ஒருசந்தர்ப்பம் கொடுக்கவேண்டும்.

---

காணாமற்போன

## சந்திரமண் கிடைத்தது

லொஸ்ஏஞ்சலெஸ், மாச் 4

இங்கு சில தினங்களுக்கு முன் காணாமல் போன சந்திரமண் மீண்டும் கிடைத்து விட்டது.

கடந்த சனிக்கிழமை ஒரு இரவு கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த இந்த சந்திரமண் காணாமல் போய் விட்டதாகமுன் அறிவிக்கப்பட்டிருந்தது.

பொலிசாருக்கு கிடைத்த ஒருடெலிபோன்தகவலைத் தொடர்ந்து இந்தமண்தபால்பெட்டியொன்றிலிருந்து மீட்கப்பட்டது.

பெயரை வெளியிடாத நபர் ஒருவர் பொலிசாருடன் தொடர்புகொண்டு காணாமல் போன சந்திரமண் தபால் பெட்டியொன்றில் இருப்பதாகக் கூறினர். தபால பெட்டியிலிருந்து மண்ணை மீட்டு கலிபோர்ணியா பல்கலைக்கழகத்திடம் பொலிசார் திருப்பிக் கொடுத்தார்கள். நாஸாவிடமிருந்து இந்தமண் மாதிரியை ஆராய்ச்சிக்காக கலிபோர்ணியா பல்கலைக் கழகம் கடன் வாங்கியிருக்கின்றது. இந்த மண்ணைத் திருடியவர்கள் பற்றிய தகவல் எதுவும் பொலிசாருக்கு கிடைக்கவில்லை.

## பிரதமர்கள் மாநாடு

லண்டன், மார்ச். 4

கொமன்வெல்த் பிரதமர்கள் மாநாடு அடுத்த வருடம் ஜனவரியில் சிங்கப்பூரில் நடைபெறும் என்று பிரிட்டிஷ் பிரதமர் உளர்ஜிதம் செய்திருக்கிறார்.

## பொல்லாத கணக்கு!

கொழும்பு, புதன்

---

# மத்திய அரசில் அதிக இடம்

## கருணாநிதி கோரிக்கை

சென்னை, மார்ச். 4

தற்போதுள்ள ஜனத்தொகை அடிப்படையில் ஆட்சிமன்றத்தில் ஸ்தானங்களை ஒதுக்கீடு செய்யக் கூடாது. குடும்பக் கட்டுப்பாடு நடவடிக்கைகள் திறமையாக எடுக்கப்பட்டதாழ் ஜனத்தொகை பெருக்கம் குறைந்துள்ளது. இதன் காரணமாக மத்திய அரசில் தமிழ் நாட்டுக்கான இடங்கள் எண்ணிக்கை 41-லிருந்து 39 ஆக குறைந்து விட்டதுஎன்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு கருணாநிதி கூறினார்.

கருணாநிதி கீழ்ப்பாக்கம் வைத்தியக்கல்லூரி ஆண்டு தினவிழாவில் பேசினார். பார்லிமெண்டில் தமிழ்நாட்டுக்குரிய ஸ்தானங்கள் எண்ணிக்கை பழையபடி 41 ஆக உயர்த்தப்படும் என்று மத்திய அரசு உறுதி யளிக்குமானால் தமிழ்நாடு அரசும்குடும்பக்கட்டுப்பாடு பணிகளை இன்னும் அதிக உற்சாகத்துடன் மேற்கொள்ள முடியும் என்று அவர் மேலும் சொன்னார்:

வைத்திய படிப்புக்களை முடித்துக்கொண்டு செல்லும் மாணவர்கள் பாமர மக்களது துயரங்களை துடைக்கும் பணியில் சேவா உணர்வுடனும் உற்சாகத்துடனும் ஈடுபடுமாறு கேட்டுக் கொண்டனர்.

மத்திய சுகாதார குடும்பக் கட்டுப்பாடு துணைமந்திரி டாக்டர் சந்கிரசேகர் பேசுகையில் ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்தையும் 25 படுக்கை வசதிகளும், ஒரு டாக்டருடனும் கூடிய சிறிய ஆஸ்பத்திரியாக ஆக்க வேண்டுமென்பதே அரசின் நோக்கம் என்றும் அது 1000 பேருக்கு வைத்தியவசதிகளை அளிக்கக் கூடியதாக விளங்க வேண்டும் என்றும் அவர் மேலும் கூறினர்.

அவர் மேலும் பேசுகையில், தமிழ்நாட்டில் திறமையான நிர்வாகம் நடப்பதை மத்தியஅரசு பாராட்டுகிறது என்று மத்திய அரசியல் அதிகாரத்தில் உள்ள காங்கிரஸ் கட்சிக்கு தி மு.க. அளிக்கும் ஆதரவு மிகவும் மதிக்கப்படுகிறது என்றும் தி.மு.க ஆதரவு இல்லை என்றால், மத்திய அரசு எப்படி இருக்கும் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும் என்றும் அவர் மேலும் சொன்னார்.

### ஒகினவா தீவு

டோக்கியோ, மார்ச் 4

ஒகினவா தீவை ஜப்பானுக்குத் திருப்பிக் கொடுப்பதற்கான கடிதங்களை ஜப்பானும் அமெரிக்காவும் பரிமாறிக் கொள்ளத் தொடங்கியிருக்கின்றன. 1972-ம் ஆண்டில் இத்தீவை ஜப்பானிடம் திருப்பிக் கொடுக்க அமெரிக்கா இணங்கியிருக்கின்றது.

### லண்டனில் வில்லிபிரான்ட்

லண்டன், மார்ச். 4

மேற்கு ஜெர்மன் பிரதமர் திரு. வில்லிபிரான்ட் நேற்று பிரிட்டிஷ் ஆட்சிமன்றத்தில் உரைநிகழ்த்தினார்பிரிட்டிஷ் ஆட்சிமன்றத்தின் இருசபைகளின் இணைப்புக் கூட்டத்தில் உரைநிகழ்த்தியபின் முதலாவது மேற்குஜெர்மன் பிரதமர் இவராகும், திரு. பிரான்ட் பிரதமர் வில்சனுடன் இருதடவைகள் பேச்சுவார்த்தைகள் நடத்தியிருக்கிறார்.

## 'ராணுவத்தினர் அரசியலில் ஈடுபடக்கூடாது'

### மேஜர் ஜெனரல்அட்டிகலே எச்சரிக்கை

கொழும்பு, புதன்

"இராணுவத்தினர் எந்தச் சந்தர்ப்பத்திலும் அரசியலில் ஈடுபடக்கூடாது. அவர்கள் மத்தியில் ஒழுங்கும் கட்டுப்பாடும் நிலவ வேண்டும்"

கொழும்பு இராணுவத் [illegible]

அவர் தொடர்ந்து பேசுகையில், இராணுவத்தில் தனிப்பட்ட ஒவ்வொருவருக்கும் அரசியல் உரிமைகள் உள்ளன. ஆனால் ஒன்று சேரும்போது இராணுவத்தினர் அரசியலை அறவே தவிர்க்கவேண்டுமெனக் கூறிய [illegible]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ரொடீஷியா மீது ராணுவ நடவடிக்கை எடுக்கவேண்டு மென்று ஆபிரிக்க நாடுக... புறுத்துமாறு ஐ. நா. பாது காப்புச்சபையைக் கோரி யுள்ளன. ரொடீஷியாவுக்கு ... தொடர்ந்திருக்குமென்றார்.

## மொழிப்பிரச்னேயில்

# தி. மு. கழகம் காமராஜரை பின்பற்றுகின்றதாம்

## திருச்சியில் அவரே வெளியிட்ட கருத்து

சென்னை, மார்ச் 4

திராவிட முன்னேற்றக் கழகம் மொழிப் பிரச்னை யில் தம்மைப் பின்பற்றத் தொடங்கியிருப்பதாக சின் டிகேட் காங்கிரஸ் தலைவர் களில் ஒருவரான திரு. காமராஜ் கூறினர்,

தி. மு. க. மொழி விஷ யத்தில் தம்மைப் பின்பற்ற முன்வந்துவிட்ட பின்னரும் திரு. கருணாநிதி சவால்கள் விட்டுக் கொண்டிருப்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை என்று அவர் கூறினர்.

திருச்சி மாவட்டத் தேசிய மாணவர் வளர்ச்சிக் கவுன் சிலின் இரண்டாவது மகா நாட்டை முடித்துவைத்து ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையிலேயே இவ்வாறு காமராஜ் கூறினர்.

மொழிப் பிரச்னையைத் தீர்க்க நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லையென்று பிரதம மந்திரி இந்திரா காந்தியை யும், போட்டிக் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜக ஜீவன்ராமையும் காமராஜ் கண்டித்துப் பேசினர்.

மொழிப் பிரச்சினையில் மக் களுடைய உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு நாட்டைப் பிளவுபடுத்தக் காமராஜ் முயல்வதாக ஜகஜீவன்ராம் கூறிய புகாரை அவர் கடு மையாக ஆட்சேபித்தார்.

காங்கிரஸ் அக்ராசனரா யிருந்தபோது மொழிப் பிரச்னையில் தாம் அசட் டையாயிருந்ததாக தி. மு. க. கூறிய புகாரையும் காம ராஜ் மறுத்தார்.

தாம் காங்கிரஸ் அக்ரா சனராயிருந்த காலத்தில் பார்லிமென்ட் ஆட்சி, மொழிச் சட்டத்தை நிறை வேற்றியபோது அதனுல் ஹிந்தி பேசாத மக்கள்மீது ஏற்படக்கூடிய சமயில்லாத சுமை பற்றி அவ்வப்போது அனுசரித்து வந்திருப்பதா கச் சொன்னர். காரியக் கமிட்டிக் கூட்டங்களிலும் இதுபற்றிப் பல தடவை குறிப்பிட்டிருப்பதாகச் சொன்னர். இதுபற்றிக் காலஞ்சென்ற அண்ணுதுரை யுடனும் பேச்சு நடத்தி யிருப்பதாகக் கூறினர்.

குறிப்பாகத் தம்முடைய கருத்தையொட்டி மொழிப் பிரச்னை பற்றித் தி. மு. க. பேரவை, தீர்மானம் நிறைவேற்றிய பின்னர் முதலமைச்சர் கருணாநிதி விடுக்கும் சவால்களைத் தம் மால் புரிந்துகொள்ள முடிய வில்லையென்று காமராஜ் கூறினர். ஹிந்தி பேசாத மக்களுக்குக் காலஞ்சென்ற நேரு அளித்த வாக்குறு தியை அப்படியே அமுல் நடத்தவேண்டும் என்று தாம் வற்புறுத்தி வந்திருப் பதாகச் சொன்னர். அரசியல் சாசனத்திலிருந்து மொழி பற்றிய அத்தியாயத்தை அகற்றவேண்டும் என்றுகூறி ஞர். அண்ணுதுரை உயி ருடனிருந்தால் மொழிப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கைகளை மேற் கொண்டிருப்பார் என்ருர்

பிரதம மந்திரி இந்திரா காந்தியுடன் தி மு க வுக்கு சுமுகமான உறவு இருப்ப தால், தி மு க வின் மொழித் தீர்மானத்துக்கு இந்திரா காங்கிரசின் ஆதரவைப் பெற கருணுநிதி ஏன் முய லக்கூடாது என்ருர்.

மொழிப் பிரச்னையில் என் னுடைய நிலையை காமராஜ் நிலை) ஏற்றுக்கொண்டபிறகு மொழிப்பிரச்னையில்தி மு க. தீர்மானத்தை சின்டிகேட் ஆதரிக்குமா என்றுகருணுநிதி கேட்பதாகச்சொன்னுர்.

மொழிப்பிரச்னையைத் தீர் க்க ஹிந்தி. ஹிந்தி பேசாத மாநிலங்களின் முதலமைச் சர்கள் மகா நாட்டை பிர தம மந்திரி கூட்ட வேண்டு மென்று காமராஜ் கூறினுர்.

### தீர்மானங்கள்

மொழிப்பிரச்னையில் தி. மு க கடைசியாக மேற்கொண் டுள்ள நிலையை வரவேற்றும் இந்த விஷயத்தில் ஸ்ரீ காம ராஜின் வழிக்குத் தான் அது வந்திருக்கிறது என்றும் இம் மகா நாட்டில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட ஒரு தீர் மானம் கூறுகிறது. இந்த நிலையை தி. மு க. மாற்றிக் கொள்ள கூடாது என்றும் இத்தீர்மானம் கேட்டுக் கொள்ளுகிறது.

(ஹிந்தி மொழி பேசாத பகுதியினருக்கு பிரதமர் நேரு அளித்தவாக்குறுதிகளை முழு அளவில் பூர்த்தி செய் யும் வகையில், அரசியல் சட் டத்தில் மொழி பற்றியுள்ள அத்தியாயத்தைத் திருத்த வேண்டுமென்று சென்ற வாரம் திருச்சியில் கூடிய தி. மு. க, பொதுக்குழு கோரி யிருப்பது நினைவிருக்கலாம். ஹிந்தி பேசாத பகுதி மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் துணை ஆட்சி மொழியாக நீடித்து வரவேண்டும் என் பது தான் நேரு அளித்த வாக்குறுதியாகும்.)

... ... ...

### வருமானவரி கட்டாதோர் 50,000க்கும் அதிகம்

கொழும்பு, புதன்

நாட்டில் 50 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் வருமான வரி கட்டாமல் ஏமாற்றுவ தாக வருமான வரி இலாகா கண்டு பிடித்திருக்கிறது.

இவர்களிடமிருந்து வரிப் பணத்தை அறவிடத்துரித முயற்சிகளை வருமான வரி இலாகா மேற்கொள்ளவிருக் கிறது. (சி பி ஏ)

... ... ...

### வள்ளுவர் முத்திரை

கோப்பாய், புதன்

"எதிர்வரும் மேமாதத் தில் கொண்டாடப்படவிருக் கும் வள்ளுவர் தினத்தை யொட்டி வள்ளுவர் நினைவு முத்திரை வெளியிடவேண் டும் என்று அரசாங்கத்தைக் கோரும்தீர்மானமொன்றை கோப்பாய் திருவருள் தவ நெறி மன்றம் நிறைவேற்றி யுள்ளது.

...ம்பரம் ... கரணவாய் மேற்கு மூத்தவிநாயகர் கோவிலடி மயிலியாவளவு பகுதியில் கிராமநலசேவா சங்கத்தை அங்குரார்ப் பணம் செய்து வைத்துப் பேசுகையில் சுட்டிக்காட்டி ...

ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந் தக்குருக்கள் தலைமையில் இக் கூட்டம் நடைபெற் றது. திரு தில்லையம்பலம் ஆசிரியர் இறைவணக்கம் நிகழ்த்தினுர்.

திரு மு சிவசிதம்பரம் தொடர்ந்து பேசுகையில் சொன்னதாவது;-

அரசாங்கம் பல்கலைக்கழக பிரச்னையில் இருகட்சிகளை யும் வேடிக்கை பார்க்கின் றது. பல்கலைக் கழகம் அரசியல் வாதி களுக்கு அரசியல் காரண மாகஅல்ல நிறுவப்படுவது மாணவர்களுக்குத்தான் பல் கலைக்கழகம், 25 ஆண்டு களில் 100க்குத் 90வீதமான மாணவர்கள் யாழ்ப்பாணத் திலிருந்தே பல்கலைக்கழகம் செல்கின்றனர், நாம் கல்வி யில் முன்னேறியிருப்பதா லும் சிறந்த கல்லூரிகள் இருப்பதாலும் யாழ்ப்பா ணத்தில் பல்கலைக்கழகம் செல்லும்மாணவர் தொகை குறையாது.

யாழ்ப்பாண மாணவிகள் கொழும்பில் அனுபவிக்கும்

கடமையிலிருந்து தவறிவிட் டால் மறுதடவை ...ற்றக் கட்சிக்குச் சந்தர்ப்பம் கொடுப்பார்கள் இதுபோல் இலங்கையிலும் தமிழ்க்காங் கிரஸ் கட்சிக்கும்ஒருசந்தர்ப் பம் கொடுக்கவேண்டும்.

வேலையற்ற வாலிபர்களின் பிரச்னையே இன்று எதிர் காலத்தை இருள்மயமாக்கு கின்றது. புதிய வேலைவாய் ப்புக்களுக்கான திட்டங் களைப் பிரதமமந்திரியிட மும், அமைச்சர்களிடமும் சமர்ப்பித்தேன் அவர்கள் ஏற்றுக் கொண்ட போதிலும் அமுல் நடத்தத் தயங்குகின்றனர், படித்த வாலிபர்கள் அரசாங்க உத் தியோகங்களை நம்பியிராது கைத் தொழில்களில் ஈடுபட வேண்டும். கைத்தொழில் செய்வது கௌரவத்திற்கு இழுக்கானதல்ல, அதுவாழ்வு க்குப் பெருமைதரும்'

— —

### பரிசளிப்பு விழா

கோப்பாய், புதன்

கோப்பாய் கிறிஸ்தவ கல் லூரிப் பரிசளிப்பு விழா இம் மாதம் 20-ம்தேதி நடை பெறவிருக்கிறது

இவ்விழாவில் பிரதம அதி தியாக சுகாதார அமைச்சின் நிரந்தரககாரியதரிசி திரு சி பாலசிங்கம் கலந்து கொள் வார்.

டின் பிரதமர் ... செய்திருக்கிருர்.

### பொல்லாத கணக்கு!

கொழும்பு, புதன்

கடந்த வருடம் நடை பெற்ற கல்விபொதுத்தரா தரப் பத்திரப் பரீட்சை முடிவுகளிலிருந்து அந்த பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கு எண்கணி தமும், கணிதமும்தாள் இடையூருகவிருந்தன வென்று கல்வி இலாகா விஞல் வெளியிடப்பட்ட புள்ளிவிபரங்களிலிருந்து தெரியவருகிறது.

பரீட்சையில் தோற்றி யோரில் எண்கணிததில் சிங்கள மாணவர்கள் 23 வீதமும் தமிழ் மாணவர் 22 2 வீதமும் ஆங்கில மூலத் தில் தோற்றியவருள் 26வீத முமே சித்தியடைந்துள்ளனர்.

கணிதத்தில் 28 வீதம் சிங்கள மாணவர்களும் 38 வீதம் தமிழ்மாணவர்களும் 40 வீதம் ஆங்கிலமுலம் தோற்றியவரும் சித்தியடை ந்துள்ளனர். இம் மூன்று மொழிகளிலும் பரீட்சை எழுதியவர்களில் வர்த்தக கணிதத்தில் 30 வீதத்திலும் குறைவானவர்களே சித்தி யடைந்துள்ளனர்.

சி. பி. ஏ.

இராணுவத்தினர் எந் தச் சந்தர்ப்பத்திலும் அர சியலில் ஈடுபடக்கூடாது. அவர்கள் மத்தியில் ஒழுங் கும் கட்டுப்பாடும் நிலவ வேண்டும்''

கொழும்பு இராணுவத் தலைமைக் காரியாலயத்தில் இராணுவ அதிகாரிகளை அழைத்துப் பேசிய இராணு வத் தளபதி மேஜர் சேபால அட்டிகலே மேற்கண்டவாறு எச்சரித்துள்ளார்.

கையில், இராணுவத்தில் தனிப்பட்ட ஒவ்வொரு வருக்கும் அரசியல் உரிமை கள் உள்ளன. ஆனுல் ஒன்று சேரும்போது இராணுவத் தினர் அரசியலை அறவே தவிர்க்கவேண்டுமெனக் கூறிய தளபதி, இதை இராணுவத்தின் சகல பிரிவு களுக்கும் தெரிவிக்குமாறும் அங்கிருந்த இராணுவ அதி காரிகளுக்கு உத்தரவிட் டார். (சி, பி. ஏ

## 'சிங்களமக்களுடன் கூட்டு சேர்ந்து உரிமைபெற வேண்டும்'

### — வி. பொன்னம்பலம்

யாழ்ப்பாணம், வியாழன் :'இலங்கையிலுள்ள பிரச் னைகளில் பல சகல இனங் களுக்கும் பொதுவான பசி. வேலையின்மை, கல்விவசதி கள், போக்குவரத்து பற்ருக் குறை, விலைவாசி உயர்வு போன்ற இதற்கு நல்ல உதாரணங்களாகும் ஒரு பகுதி மக்களின் வாழ்வை முழுமைப்படுத்த இவற்றை சரியாக அமைத்தல் அவசி யம். இதன் பின்புதான் கலை, கலாச்சார, இலக்கியம் போன்றன வளர்ச்சியுறுகின் றன. வெறும் வயிற்றில் வேதாந்தம் பேசமுடியாது. நாம் பொருளாதாரத்துறை யில் நாட்டை எதிர்நோக் கும் பொதுப்பிரச்னைகளை முதலில் அணுகித்தீர்க்க வேண்டும்.''

கோப்பாய் கிறீஸ்தவ கல் லூரி மாணவர் மன்றக் கூட் டத்தில் ''இலங்கையில் சிறு பான்மை இனத்தவரின் பிரச்னைகளும் தீர்வு முறை களும்'' என்ற தலைப்பில் பேசுகையில் திரு. வ: பொன் னம்பலம் எம். ஏ மேற் கண்டவாறு குறிப்பிட்டார். திரு. குகப்பிரகாசம்தலைமை வகித்தார்.

திரு. பொன்னம்பலம் மேலும் பேசியதாவது:- பொருளாதார முன்னேற் றம் இன்மையால் தான் நாட்டில் பற்ருக்குறை நிலவு கிறது. தனி ஒரு இனம்தனி த்து இயங்கி நமது நாட் டின் பிரச்னைகளை தீர்க்கமுடி யாது. சிங்கள பிரதேச அபி விருத்திக்கு தமிழ் வல்லுனர் கள் உழைத்து வருகின்ற னர். தமிழ்ப்பிரதேச அபி விருத்திக்கு தென்னிலங்கை நீர்வளம் திசை திருப்பப்பட வேண்டும். மின்சார இணைப்பு கள் வடகிழக்கின் தொழில் பெறும் வாய்ப்புகளை அதி கரிக்க உதவும் தமிழ் பிர தேச அபிவிருத்திக்கு சிங் கள மாவட்டங்களின் பொருளாதார மறுமலர்ச்சி அத்தியாவசியம். நாட்டை ஒரே அங்கமாகக் கருதி திட்டமிட்டு பொருளாதார அமைப்பு உருவாக்கினுல் தான் தேசத்தின் பிரச்னை களுக்கு நிரந்தர தீர்வுகாண முடியும்.''

''தமிழ் மக்களின் உரிமை களை உறுதிப்படுத்த சிங்கள முற்போக்கு சக்திகளுடன் தமிழரிடையேயுள்ள விவ சாய தொழிலாள வேலை யற்ற வாலிபர்கள் கூட்டுச் சேர்ந்து அடிப்படை மாற் றங்களுக்கு வழிகோல வேண்டும். இவ்வகை சகோ தரத்துவ மூலம் இனங் களிடையே பரஸ்பர நம் பிக்கை, பிறர் உரிமைகளைக் கௌரவிக்கும் நிலை உரு வாகும். வடகிழக்கு மாகா ணங்களில் தமிழை தேசீய இனத்தின் உத்தியோக மொழி என்ற நிலையை அங்கீகரிக்கவேண்டும்

(மல்லா. நிரு)

— —

### 'இடம் மாற்றவும்'

யாழ்ப்பாணம், வியா.

தெல்லிப்பளையில புதிய ஆஸ்பத்திரி திறகபபட இருப்பகால் தறபோது தெல்லிப்பளை வைத்திய அதிகாரி கந்தோரிலுள்ள வைத்தியசாலையை மல்லா கத்திற்கு இடமாற்றம் செய்து தருமபடி சுகாதார அமைச்சரை மல்லாகம் கிராம சபையினர் வேண்டி யுள்ளனர். (மல். நிரு)

### டைனமைற் மீன்

முசலி, புதன்

மன்னுர் மாவட்டத்தைச் சேர்ந்ததேவன்பிட்டி, இலுப் பைக் கடவை, மூன்ரும் பிட்டி ஆகிய பகுதிகளில் டைனமைற் வைத்து மீன் பிடிப்பவர்களின் தொகை அதிகரித்து வருவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

டைனமைற் வைத்து மீன் பிடிப்பதால் கடலில் வாழும் மீன்களெல்லாம் இறந்து விடுவதாகவும் இதனுல் இப்பகுதியில் மீன்கள் வர வரக் குறைந்து வருவதாக வும் கூறிக்கொள்ளப்படுகி றது.

— —

### சண்டை முடியும்வரை

# இஸ்ரேலுக்கு விமானம் கொடுக்கமாட்டோம்

## நியூயோர்க்கில் பிரஞ்சு அதிபர்

நியுயோர்க், மார்ச்.4

மேற்காசியாவில்சண்டை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்குமாஞல் பிரா ன்ஸ் இஸ்ரேலுக்கு கொடு க்க வேண்டிய 50 மிருஜ் சண்டை விமானங்களையும் கொடுக்கப்போவதில்லை.

இந்தத் தகவலை பிரஞ்சு அதிபர் பொம்பிடோ கூறி ஞர் திரு. பொம்பிடோ அமெரிக்காவில் தமது எட்டு நாள் பிரயாணத்தை முடித் துக்கொண்டு பாரிஸ்திரும்பி யிருக்கின்ருர். நாடு திரும்பு வதற்குமுன்னதாக அதிபர் பொம்பிடோ நியுயோர்க் கில் பத்திரிகை நிருபர்களி டம் பேசினர். லிபியாவுக்கு பிரான்ஸ் மிருஜ் ஜெற்விமா னங்கள் விற்பனை செய்திருப் பதை அதிபர் பொம்பிடோ மீண்டும் ஆதரித்து கருத்தை வெளியிட்டார்.

லிபியாவுக்கு பிரான்ஸ் சண்டை விமானங்கள் விற் பனை செய்திருப்பதை எதிர் த்து அமெரிக்காவில் பொம் பிடோ விஜயம் செய்த ஊர் களில் எல்லாம் ஆர்ப்பாட் டங்கள் நடத்தப்பட்டன. இஸ்ரேலுக்கு 50 மிருஜ் சண்டை விமானங்களை விற் பனை செய்வதற்கு பிரான்ஸ் ஏற்கனவே ஒப்புக் கொண்டி ருக்கிறது. இதற்கான பண மும் செலுத்தப்பட்டு விட் டது. ஆனுல் மேற்காசியா வில் சண்டை ஓயும்வரை இஸ்ரேலுக்கு இந்த விமா னங்களை பிரான்ஸ் கொடுக் கப் போவதில்லையென்று அதிபர் பொம்பிடோ கூறி யிருக்கிருர்.

### 12-வது பஜனை

யாழ்ப்பாணம், வியா

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு நல்லூர் பஜனைச் சபையினர் நல்லூரிலிருந்து கிரிமலைக்கு பாதயாத் திரையை மேற்கொள்ள விருக்கின்றனர். நாளைமாலை 7 மணிக்கு நல்லூர்க் கந்த சுவாமிகோவிலிலிருந்து பாத யாத்திரை ஆரம்பித்து பருத் தித்துறை வீதி, நாவலர் வீதி, கன்னுதிட்டி வீதிவழி யாக வண்ணை வைத்தீஸ் வரன் தேவஸ்தானத்தை யடைந்து பின் காங்கேசன் துறை வழியாகச் செல்லும் பன்னிரண்டாவது வருட மாக இப்பாதயாத்திரையை இச்சபை மேற்கொள்ளுகின் றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

பிறப்பும் இறப்பும் இடைவிடல்மல் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன இவற்றில் நாம் வருத்தப்படுவதற்கோ மகிழ்ச்சிஅடைவதற்கோ காரணம் ஒன்றும் இல்லை. — மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் மாசிமாதம் 22-ந் திகதி (5-3-70)


## சிங்களமும் தமிழும்

தமிழ் மொழியைப் படிப்பதற்கு சிங்களவர்கள் பெரும் சோம்பேறிகளாக இருக்கிறார்களென்றும் சிங்களத்தைப் படிப்பதற்கு தமிழர்களின் பெருமை விடுகிறதில்லையென்றும் தேசிய உயர்கல்விச்சபைத் தலைவர் டாக்டர் ஜி. பி. மலலசேகரா ஒரு கல்லூரியின் பரிசளிப்புவிழாவில் பேசுகையில் கருத்து தெரிவித்திருக்கிறார். சிங்களத்தைப் படிக்க தமிழரும் தமிழைப்படிக்கச் சிங்களவரும் மறுத்தாலும் இருதரப்பினரும் அந்நிய மொழியான ஆங்கிலத்தைப் படிக்கத் தயாராக இருக்கிறார்களென்றும் இதுதான் நாட்டின் கேடு என்றும் அவர் கூறுகிறார். வேற்றுமையை வளர்ப்பதிலேயே வளர்ச்சிபெறும் அரசியல்வாதிகளிருந்தாலும் பல்வேறு சமூகத் தலைவர்களும் நாட்டின் ஐக்கியத்துக்காக உழைக்க ஒன்றுசேரவேண்டுமென்றும் டாக்டர் மலலசேகரா யோசனை கூறியிருக்கிறார்.

டாக்டர் மலலசேகரா இந்த நாட்டின் சிறந்த கல்விமான்களுள் ஒருவர். தேசியஉயர்கல்விச்சபையின் தலைவராகப் பதவிவகிக்கிறார். வெளிநாடுகளில் இலங்கையின் தூதுவராகவும் பதவி வகித்தவர். வெளிநாடுகளில் பல மகாநாடுகளிலும் கலந்துகொண்டு நிறைந்த அனுபவம் பெற்றவர். தெய்வ பக்தியுமுள்ளவர். மக்கள் மத்தியில் மதிப்பும் பெற்றிருப்பவர், இவரைப்போன்றவர்கள் தேசிய ஒருமைப்பாட்டையும் நாட்டின் ஐக்கியத்தையும் நிலைநாட்டுவதற்கு துணிச்சலுடன் முன்வந்தால் இப்போது நிலவும் வேறுபாடுகளும்; சமூகங்களுக்கிடையிலான சந்தேகங்களும் அச்சமும் நீங்கி உண்மையான தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்தமுடியும்.

1956-ம் ஆண்டில் சிங்களம் மட்டும் சட்டம் வரப்பட்டது தமிழர்களின் மானத்துக்கு இழுக்கு ஏற்படுத்தியது. இது ஒரு தன்மானப் பிரச்னையானது. இதனால்தான் அவர்கள் சிங்களம் படிக்க மறுத்து வருகின்றனர். உண்மையான தேசிய ஐக்கியத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் இப்போதும் கூடச் சிங்களம் மட்டும் சட்டத்தை திருத்தினால் அல்லது வாபஸ்பெற்றால் மீண்டும் தமிழ்மக்கள் சிங்களத்தைத் தாமாகவே விரும்பிப்படிக்க முன்வருவர்.

சென்ற பொதுத்தேர்தலின்போது ஐக்கியதேசீயக் கட்சியினர் விடுத்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் அரசாங்க ஊழியர் சிங்களம் தமிழ் ஆகிய இரு மொழிகளும் தெரிந்திருக்கவேண்டும் என்று தெரிவித்திருந்தது. இனிவரும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இதே கொள்கையை ஐக்கியதேசீயக்கட்சி வெளியிடுமாவென்பது தெரியவில்லை. ஆனாலும் உண்மையான தேசிய ஐக்கியத்தில் ஐக்கியதேசீயக்கட்சி நம்பிக்கைகொண்டிருந்தால் - நாட்டின் நிர்வாகம் சீராக நடைபெறவேண்டுமென்பதில் அக்கறையிருந்தால் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் அரசாங்க ஊழியர் தேர்ச்சிபெறவேண்டுமென்ற கொள்கையை ஐக்கியதேசீயக்கட்சி தொடர்ந்து கடைப்பிடிக்கும்.

தமிழ்க்காங்கிரசும், தமிழ் அரசுக்கட்சியும் கூட சிங்கள மக்கள் தமிழ்மொழியையும் தமிழ் மக்கள் சிங்களமொழியையும் மூன்றாவது இஷ்ட பாடமாகப் படிக்கலாமென்று கூறுகின்றனர். ஆங்கிலம் ஒரு சர்வதேசமொழி. அது உலக மக்கள் அனைவருக்கும் அவசியம் என்பதில் நமது நாட்டுத் தலைவர்களுக்கிடையிலும் அபிப்பிராய பேதமில்லை.

இந்தியாவில் சில மாநிலங்களில் அந்த மாநிலமொழியும் இந்தி அல்லது மற்

## "மார்ச் 27-ல் ஆட்சிமன்றம் கலைக்கப்படும்'

— என். எம்.

கேகாலை, புதன்

'ஒரு நாட்டின் அபிவிருத்தியை பிறநாட்டுடன் தாழ்வான அதாவது அடிமைத்தனமாக உடன்பாடுகள் மூலம்பெறின் அது அந்நாட்டுமக்களுக்குச் செய்யும் நம்பிக்கைத்துரோகமாகும். மகாவலி திரும்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம் இந்த அரசாங்கம் கட்டாயமாகஇந்தநாட்டை அமெரிக்காவின் ஆதிக்கத்தின் கீழும் உலகவங்கியின் அதிகாரத்தின் கீழும் கொண்டுவந்துவிடும்'.

லங்கா சமசமாஜக்கட்சித் தலைவர் டாக்டர் என்.எம். பெரேரா அலபலாவலையில் பௌத்தஆலய மொன்றுக்கு அடிக்கல் நாட்டிப் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும்தொடர்ந்து பேசுகையில் பிரதமர் டட்லி சேனநாயக்கா 1970-ம் ஆண்டு மகாவலி காலம் எனக்குறிப்பிடுகிறார். ஆனால் இது பொதுமக்களின்காலம். ஆட்சிமன்றம் மார்ச் 27-ல் கலைக்கப்படும் பொதுத்தேர்தல் மார்ச் நடுப்பகுதியில் இடம் பெறும் எனத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில்உரையாற்றிய கேகாலை ஆட்சிமன்ற அங்கத்தவர் கல்வியமைச்சர் திரு, இரியகொலையின் புதிய கல்வித்திட்டம் நாட்டுக்கு ஆபத்தானது. கற்றவர்களுக்கு இத்திட்டத்தினால் யாதொரு பயனுமில்லை. பட்டதாரிகள், பல்கலைக்கழக மாணவர்கள், ஜீ.சீ.ஈ சித்தியடைந்த மாணவர்கள் ஆகியோர் இன்று அரசாங்கத்தை எதிர்த்து கூட்டணியினரை ஆதரிக்கின்றனர் என்றார்.

## 'திட்டம் உங்களது எனில் ஏன் செயல்படுத்தவில்லை'

— பண்டா

குருநாகல், புதன்

'அரசாங்கம் எந்த ஒரு அபிவிருத்திவேலையை ஆரம்பிக்கும்போதும் எதிர்க்கட்சியினர் அந்த அபிவிருத்தி வேலை ஏற்கனவே அவர்களால் அவர்கள் அதிகாரத்திலிருக்கும்பொழுது திட்டமிடப்பட்டது எனப்பெருமையாகக்கூறிவிடுகிறார்கள். அப்படியானால் அவர்கள் கையில் அதிகாரம் இருக்கும் பொழுது ஏன் இவ்வபிவிருத்தி வேலைகளைச் செயற்படுத்தவில்லையென நான் அவர்களைக்கேட்கிறேன்.'

களுதலியா வித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையில் உணவு விவசாய அமைச்சர் திரு. எம். டி. பண்டா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும்தொடர்ந்து பேசுகையில் கடந்தபொதுத் தேர்தலில் இந்த அரசாங்கம் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி கொண்டுவருவதைக் கண்ணுள்ளவர்கள் யாவரும் அறிவர். அரசாங்கம் திட்டமிட்டுச் செயல்படுத்திவரும் அபிவிருத்தி வேலைகளைப் பற்றி சில எதிர்க்கட்சி அரசியல் வாதிகள் அரசியல் நன்மையைப்பெறுவதற்காக தவறான பிரச்சாரம் செய்கிறார்கள் எனக் குறிப்பிட்டார்.

... ... ...

அரசாங்கத்தின்

## வீழ்ச்சி நெருங்குகிறது

ஹிரியாலை, புதன்

'ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய ஆதரவாளர்கள் பலர் இப்பொழுது தங்கள் கட்சியில் வெறுப்புக் கொண்டுள்ளார்கள். இவர்களில் பலர் இப்பொழுது எமது கட்சியில் சேருகின்றனர். அநேகமான ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு எங்களைச் சார்வார்கள் என நான் உறுதியாகக் கூறுவேன்.

ஹிரியாலைத் தொகுதியில் நடைபெற்ற பிரசாரக் கூட்டமொன்றில் பேசிய

## தனியார்துறையினர் பாதிக்கப்படுவர்

கோட்டை, புதன்

'வியாபாரத்தை அரசாங்கம் தேசியமயமாக்கினால் தனியார் வர்த்தகர்கள் பெரிதும் பாதிக்கப்படுவர். அவர்களுக்குவியாபாரத்தில் இடமிரு[illegible]து. எனவே தான் நான் வியாபாரத்தை தேசியமயமாக்குவதை எதிர்க்கிறேன். வியாபாரத்தில் தனியார் துறையினர் ஈடுபாடு முக்கியத்துவம் வாய்ந்த[illegible] இதுமக்களது

## சிவராத்திரி விழா ஏற்பாடுகள்

கொக்குவில், வியாழன்

கொக்குவில் மனோன்மணி இந்துசமய அபிவிருத்திச் சங்க ஆதரவின்கீழ் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் சிவராத்திரி விழா விமரிசையாகக்கொண்டாடப்பட விருக்கிறது நான்குசாமங்களும் அபிஷேகமும், பக்திப் பாடல்களும் சமய சம்பந்தமான உபந்தியாசம், கதாப்பிரசங்கம், இசைவிருந்து ஆகியனநடைபெறும்.

0 0 0

உருத்திரபுரம், வியாழன்

உருத்திரபுரம் சிவாலயத்தில் மகாசிவராத்திரி விழா விமரிசையாக நடைபெறும். பண்டிதர் இ நவரத்தினக் குருக்கள், திரு இ த சுப்பிரமணியம் ஆகியோரின் சொற்பொழிவுகளைத் தொடர்ந்து வில்லுப்பாட்டு நாடகம், கூட்டுப் பிரார்த்தனை பக்திப்பாடல்கள் ஆகிய நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

0 0 0

யாழ்ப்பாணம் வியாழன்

சாந்தயர்மடம் கற்பக விநாயகர் ஆலயத்தில் பதினைந்தாவது ஆண்டு நிறைவு விழாவும் சிவராத்திரி விழாவும் நடைபெறும். வைத்திய கலாநிதி திரு சோ சண்முகலிங்கம் தலைமைவகிப்பார். திரு க சிவராமலிங்கம், திரு க முருகேசு, திரு எஸ். கார்த்திகேசு, திரு நா சுப்பிரமணியம், திரு மு மயில்வாகனம் ஆகியோரின் சொற்பொழிவுகள் நடைபெறும். வில்லிசை, இன்னிசை, பக்திப்பாடல்கள் ஆகியனவும் இடம்பெறும். விழா இறுதியில் சைவசமய அறிவுப் போட்டியில்வெற்றி பெற்றவர்களுக்கு திருமதி சோ சண்முகலிங்கம் பரிசுகள் வழங்குவார்.

0 0 0

கோப்பாய், வியாழன்

கோப்பாய் வீரபத்திர சுவாமி கோவிலில் மகாசிவராத்திரி விழா கொண்டாடப்படும். பகல் விசேஷ நிகழ்ச்சியாக நவோத்ரசத சங்காபிஷேகமும்இரவுஉற்சவம். கோப்பாய் திருவருள் தவநெறி மன்றச்சார்பில் கவிஞர் இ நாகராஜன் தலைமையில் கவியரங்கு கதாப்பிரசங்கம், சொற்பொழிவு, கலைமணி சுப வடிவேலு குழுவினரின் வில்லிசை ஆகிய நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

பூநகரி, வியாழன்

சிவராத்திரி விழாவை முன்னிட்டு யாத்திரிகர்களுக்கு மன்னார் டிப்போவினால் விசேஷ பஸ் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. பூநகரி சங்குப்பிட்டி, கேரதீவு, ஆயத்துறையில் மேலதிக படகுகள் சேவைக்குவிட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

0 0 0

மாவிட்டபுரம், வியாழன்

சிவராத்திரி விழாவையொட்டி கீரிமலை நகுலேஸ்வர சனசமூக நிலையத்தாரால் கீரிமலை நகுலேஸ்வர தேவஸ்தானத்தில் தெல்லிப்பளை கிராமசபைத் தலைவர் திரு எம் சிதம்பரநாதன் தலைமையில் நாடகங்களும், சொற்பொழிவுகளும், வேறு கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

0 0 0

மாவிட்டபுரம், வியாழன்

மாதகல் நுணசை முருகமூர்த்தி கோவிலில் சிவராத்திரிவிழா மிகச் சிறப்பாக நடைபெற விருக்கிறது. இவ்விழாவில் புராணபடனம், இசைக்கச்சேரி, சமயச் சொற்பொழிவுகள் ஆகியன இடம்பெறும்.



செல்வி சௌந்தரவல்லி

யாழ்ப்பாணம், புதன்

வவனிக்குளம் சிவாலயத் திருப்பணிசபை சார்பில் 6-ந் திகதி மகாசிவராத்திரி விழா மிக சிறப்பாக நடைபெறவிருக்கிறது. செல்வி சௌந்திரவல்லி உமா மகேஸ்வரன் இன்னிசைக் கச்சேரியும் அறிஞர்கள் பலரின் சொற்பொழிவுகளும் விழாவில் இடம் பெறும்.

## சமசமாஜக் கட்சியின்

## ஜயாரன் எழுதுவது..

சென்ற சுமார் ஐம்பது வருடங்களுக்கு மேல் யாழ்ப்பாணத்திலே நல்லபடியாக நடைபெற்றுவந்த ஐக்கிய லாப நிதிக் காரியாலயத்தின் கதவுகள் சென்ற ஒரு வார காலமாக மூடப்பட்டுள்ளன. அந்த வங்கியில் பணம்போட்டவர்கள் கவலையுடன் வந்து கட்டுக் கேட்டு, தாங்கள் போட்ட பணம் கிடைக்குமா என்று விசனப்படுகிறார்கள்.

சிறப்பாக பெண்களின் சீதனத்துக்காக பணம் கட்டி வந்தவர்கள் பலர். விலை மதிப்புள்ள நகைகளை அங்கு அடகு வைத்தவர்கள் ஏராளம். மாதாமாதம் தவணை செலுத்தி தங்கள் பிற்கால வாழ்க்கைக்காக உயிர்போல் சேமித்து வந்தவர்கள் அநேகர்.

மிக நம்பிக்கையுடன் பலருக்கும் உதவியாக நடந்து வந்த இந்த ஸ்தாபனம் இனி எப்போது திறக்கும்? போட்ட பணம் கிடைக்குமா? எவ்வளவு கிடைக்கும்? என்று பலரும் கவலையுடன் கேட்கின்றனர்.

இதைப்பற்றி விசாரித்ததில் பணம்போட்டவரொருவர் இந்த நிதியைக் கலைக்கும்படி நீதிமன்றத்தில் நான்கு நாட்களுக்கு முன் மனுச்செய்துள்ளாரென்றும், இன்று ஒரு 'லிக்விடேட்டரை' நியமிக்குமாறு ஒரு மனுச் செய்துகொள்ளப்படுமென்றும் தெரியவந்தது.

இந்த நிதியிலிருந்து பணம் வரவேண்டியவர்கள், இதற்கென நியமிக்கப்படும் ஒரு புரக்டர்மூலம் தங்களுக்குச் சேரவேண்டிய பண விபரங்களைத் தெரிவித்தால் அவர் நீதிமன்றத்திற்கு இதைச் சமர்ப்பிப்பாரென்றும். 'லிக்விடேட்டர்', கணக்கு விபரங்களையெல்லாம் பார்த்து தக்க நடவடிக்கைகளை எடுப்பாரென்றும் தெரியவந்தது இதுசம்பந்தமாக சட்டபூர்வமான அறிக்கை பத்திரிகைகளில் சீக்கிரம் வெளியாகக்கூடும்.

யாழ்ப்பாணத்தில் பலகுடும்பங்களின் வாழ்வே இதில் தங்கியிருப்பதால், அவர்களது கவலையைத் தீர்க்கும்படியான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்டவர்கள் கூடிய சீக்கிரம் எடுப்பரென்றே மிக ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது இந்நிதியில் பணம் போட்டவர்களின் கூட்டமொன்று வருகிற 8-ந் திகதி கஸ்தூரியார்வீதியிலே நடைபெறுமென்று ஓர் அன்பர் தெரிவிக்கின்றார்

0 0 0

சென்னையிலிருந்து அடியார் திருக்கூட்ட இறைபணி மன்றத்தைச் சேர்ந்த 80 பேர்கள், ஈழத்திலே 9 நாட்கள் சுற்றுப்பிரயாணம் செய்து, யாழ்ப்பாணத்திலே இனிமையான பஜனைகள் நடத்திவிட்டு, தலைமன்னார் வழியாக தாயகம் திரும்பினர்.

தங்களுக்கு சென்னையிலே விசா மிக எளிதில் கிடைத்ததாயும், ஈழத்திலே சுற்றுப்பிரயாணமெல்லாம்வசதியாக இருந்ததாகவும் இத்திருக்கூட்டத் தலைவர் டாக்டர் மணி நன்றியுடனும் மகிழ்ச்சியுடனும் தெரிவித்தார்.

0 0 0

''சிவராத்திரி'' என்ற தலைப்புடன், சென்னைப் பத்திரிகைகளில் வெளியான ஓர் அறிக்கையில், ஸ்ரீகாஞ்சி சங்கராச்சாரியார் மடத்திலிருந்து, ''சிவபுராணத்தை'' (கருத்துரையுடன்) இலவசமாக கோவிலதிகாரிகள் பெற்றுக்கொள்ளலாமென்றும், இந்தப் புத்தகத்தை 3 பைசாவுக்கு விற்று, அதனால் கிடைக்கும் தொகையை, அன்று கடைசிகால அபிஷேகத்துக்குப் பயன்படுத்தும்படியும் சுவாமிகள் கேட்டுக்கொண்டிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னர்கோளறுபதிகத்தையும், திருப்பாவை, திருவெம்பாவையையும் எல்லாரும்படிக்கவேண்டுமென்று காஞ்சிப் பெரியார் கூற, அப்பாடல்கள் தமிழகமெங்கும் பரவ முடிந்தது இனி சிவபுராணத்தையும் அங்கு பொருள் உணர்ந்து பலரும் பாடக்கூடும். ஈழத்திலே இதே சமயம், இதே நல்ல காரியத்தை மில்க்வைற் ஸ்தாபனத்தார் செய்வது குறிப்பிடத்தக்கது.

0 0 0

மேவித்து நின்று விளைந்தன வெந்துயர் துக்கமெல்லாம்,
ஆவித்துநின்று கழிந்தன அல்லவை யறுப்பான்,
பாவித்த பாவனை நீயறிவாய் பழனத்தரசே,
கூவித்துக்கொள்ளுந் தனையடியேனைக் குறிக்கொள்வதே.

-அப்பர் அடிகள்

## நெடுந்தீவு.

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

## 54 சடலட

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

களுக்கிடையிலான சந்தேகங்களும் அச்சமும் நீங்கி உண்மையான தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்தமுடியும்.

1956-ம் ஆண்டில் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்ட திலிருந்துதான் இங்கு தேசியஐக்கியம் குலைந்தது மட்டுமல்ல அச்சமும் அவநம்பிக்கையும் சமூகங்களுக்கிடையில் ஏற்பட்டு நாட்டின் முன்னேற்றமே தடைப்பட்டது. சிங்களம் மட்டும் சட்டம் வருவதற்கு முன்னர் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் சிங்களம் ஒரு பாடமாகப் படிப்பிக்கப்பட்டு வந்தது. சிங்கள ஆசிரியர்கள் பலர் இங்கு பணியாற்றினர். சிங்களம்மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்டதும் தான் சிங்களம் படிக்க இங்குள்ளவர்கள் மறுத்தனர். டாக்டர் மலலசேகரா கூறுவதுபோல் தமிழர்கள் சிங்களம் படிக்க மறுப்பது பெருமையினுலோ கர்வத்தினுலோ அல்ல, சிங்களம்மட்டும் சட்டம் கொண்டு

நமது நாட்டுத் தலைவர்களுக்கிடையிலும் அபிப்பிராய பேதமில்லை.

இந்தியாவில் சில மாநிலங்களில் அந்த மாநிலமொழியும் இந்தி அல்லது மற்றொரு மாநில மொழியும் ஆங்கிலமும் போதிக்கப்படுகின்றன. இந்த மும்மொழித்திட்டம் அந்த மாநிலங்களில் வெற்றியளித்திருப்பதுடன் இந்திய மக்களிடையில் ஒற்றுமையையும் வளர்க்க உதவி வருகிறது.

நமது நாட்டைப் பொறுத்தவரையில் இந்தியாவைப் போல் பலமொழி பேசும் மக்கள் வாழவில்லை. அதைப் போன்ற பெரிய பிரச்னையுமில்லை, சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளையும் இங்கு எல்லோரும் கற்கவேண்டும் என்ற ஒரு திட்டத்தைக் கொண்டுவந்தால் மொழிப் பிரச்னையும் தீரும்; தேசிய ஐக்கியமும் நிலைபெறும்: நாடும் முன்னேறும். இதற்கு டாக்டர் மலலசேகரா போன்ற கல்விமான்கள் முன்வரவேண்டும்.

# வடபகுதியில் காணிக்கச்சேரிகள்

உடுப்பிட்டி, புதன்

முடிக்குரிய காணிகளை வழங்கும் பட்டயங்களைப் பெறுவதற்கான காணிக் கச்சேரிகள் இம்மாதம் வடபகுதியில் நடாத்தப்படவுள்ளன.

கரணவாய் தெற்கு கிராம சேவையாளர் பிரிவிலுள்ள கப்பூது' அந்தணத்திடல் கிராமங்களில் முடிக்குரிய காணிகளுக்கான பட்டயங்களை வழங்குவதற்கான காணிக் கச்சேரி இம்மாதம் 17ந் திகதி காலை உடுப்பிட்டிக் காரியாதிகாரி கந்தோரில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரால் நடாத்தப்படும்.

நாகர்கோவில் கிராம சேவையாளர் பிரிவிலுள்ள குடாரப்பு கிராமத்தில் முடிக்குரிய காணி வழங்குவதற்கான காணிக் கச்சேரி வரும் 12ந் திகதி பருத்தித்துறைக் காரியாதிகாரி கந்தோரில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரால் நடாத்தப்படும்.

அச்சுவேலிக் கிராமசேவையாளர் பிரிவுக்கான காணிக் கச்சேரி இம்மாதம் 5ந் திகதி அச்சுவேலி குடியேற்றத்திட்டப் பாடசாலையில் யாழ். உதவி அரசாங்க அதிபரால் நடாத்தப்படும்.

பண்டத்தரிப்புக் கிராம சேவையாளர் பிரிவிலுளள சில்லாலைக் கிராமத்தில் எதிர்வரும் 14-ந் திகதி கணிக்கச்சேரி நடைபெறும்.

— —

## அன்பளிப்பு வழங்குவர்

யாழ்ப்பாணம், வியாழன்

மகாசிவராத்திரியை முன்னிட்டு அன்றைய தினம் மில்க்வைற் சோப் ஸ்தாபனத்தார் திருக்கேதீஸ்வரத்தில் பல பொருட்களை அன்பளிப்பாக வழங்கவிருக்கின்றனர். 'சிவபுராணம்' (உரையுடன்) 'திருக்கேதீச்சர வரலாறும் தேவாரப் பதிகங்களும்' முதலிய நூல்களையும், இவ்வருடத்திற்கான கலண்டர் மற்றும் பிளாஸ்டிக் பை முதலியவற்றையும் இவர்கள் வழங்கவுள்ளனர்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு மார்ச் மாதம் 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

தேசியக் கட்சியை விட்டு எங்களைச் சார்வார்கள் என நான் உறுதியாகக் கூறுவேன்.

ஹிரியாலைத் தொகுதியில் நடைபெற்ற பிரசாரக் கூட்டமொன்றில் பேசிய எதிர்க்கட்சித்தலைவி திருமதி பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் எங்கள் கட்சியில் சேருவதற்குப் பல ஐக்கிய தேசியக் கட்சிப் பிரமுகர்கள் விண்ணப்பித்துள்ளார்கள். அந்த விண்ணப்பங்களை யெல்லாம் நாம் பரிசீலனை செய்துவருகிறோம் தற்போதைய அரசாங்கம் மகாவலித்திட்டத்தைக் காட்டி ஏமாற்றுகிறது இத்திட்டத்தின் மூலம் வேலையில்லாதிருப்பவர்களுக்கு வேலைவழங்கப்படும் எனப் பிரதமர் கூறுகிறார் நாட்டிலுள்ள ஏழரைலட்சம் மக்களும் 20 அல்லது 30வருடத்துக்கு ஆவது திட்டம் பூர்த்தியாகும்வரை காத்திருக்கவேண்டுமா?

பாமரின் கல்லோயா அறிக்கை கல்லோயாத்திட்டத்தால் ஏற்பட்ட நஷ்டத்தை எடுத்துக் காட்டுகிறது இதே போல அரசாங்கம் மகாவலித்திட்டத்தை போதிய ஆராய்வின்றி அவசரமாக ஆரம்பித்துள்ளதால் நஷ்டமேற்படும். இத்தகைய பெரிய தேசிய திட்டத்தை அவசரப்பட்டுசெயல் படுத்தக் கூடாது' என்றார்

இக்கூட்டத்தில் பேசிய செனட்டர் திரு. ஆர். எம். ஹமீம் ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தின் வீழ்ச்சி நெருங்குகிறது. எனக்குறிப்பிட்டார்.

திரு. ரி. பி. சுபசிங்கி திரு. பி. பி. ஜி. கலுகல்லை உட்படப்பலர் இக்கூட்டத்தில் உரையாற்றினர்.

... ... ...

## தரம் உயர்த்தப்படும்

மிகிந்தலை, புதன்

முன்னைய அரசாங்கத்தால் மகா வித்தியாலயங்களாகத் தரம் உயர்த்தப்பட்ட பாடசாலைகளை தற்போதைய அரசாங்கம் கவனியாததால் மேலும் இப்பாடசாலைகளின் தரம் குறைந்துள்ளது கூட்டரசாங்கம் பதவிககு வந்ததும் இப் பாடசாலைகளின் தரம் திரும்பவும் உயர்த்தப்படும்.

களத்தாவையில் நடைபெற்ற சுதந்திரக்கட்சிக் கூட்டத்தில் மிகிந்தலை ஆட்சிமன்ற அங்கத்தவர் திரு பத்திராஜா தென்னக்கோன் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இடமிருக்காது. எனவேதான் நான் வியாபாரத்தை தேசியமயமாக்குவதை எதிர்க்கிறேன். வியாபாரத்தில் தனியார் துறையினர் ஈடுபாடு முக்கியத்துவம் வாய்ந்தது. இதுமக்களது அடிப்படை உரிமையாகும்'

அளாவையில்நடைபெற்ற அளாவை வியாபார நிறுவனத்தின் கூட்டத்தில் பேசுகையில் சிங்கள மகாஜன பக்ஷய தலைவர் திரு. ஆர் ஜி சேனநாயக்கா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும்பேசுகையில் இந்நாட்டு வியாபாரிகளுக்கு உணவுப்பொருட்களை இறக்குமதி செய்ய உரிமையளிக்கப்படவேண்டும். இந்த உரிமை தற்போது இந்நாட்டவர் அல்லாதவர்களால் அனுபவிக்கப்படுகிறது எனக் கூறினர்.

இக்கூட்டத்தில் பேசிய அகில இலங்கை வர்த்தக சபைக்காரியதரிசி திரு. பி. முத்துகுமாரன, வர்த்தகர்களே ஒரு நாட்டின் முதுகெலும்பாவார்கள் எனக் குறிப்பிட்டார்,

... ... ...

## கிராமசபையின் தீர்மானங்கள்

புங்குடுதீவு, புதன்

கடந்தவாரம் தலைவர் திரு கா. மதியாபரணம் ஜே. பி தலைமையில் நடைபெற்ற கிராமசபைக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. 'வடபகுதியிலுள்ள இராணுவத்தினரின் அட்டகாசங்களை கண்டித்து இராணுவத்தினரை அவ்விடத்திலிருந்து அகற்றுவதுடன் விசேஷ பொலிஸ் நியமிக்கவேண்டும்' என பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சரைக் கேட்பது.

2. ஏழாம் வட்டாரத்தில் அமைந்திருக்கும் சோழகன் ஓடை-நீரணையைப் புனருத்தாரணம் செய்வது பற்றி நீர்பாசனப்பகுதிக்குஎடுத்துரைப்பது.

3. இப்பகுதிக்கு போதிய மருத்துவ மாதர்களை நியமித்துத்தரும்படி வடபகுதி சௌக்கியசேவை அத்தியட்சகரைக்கேட்டுக்கொள்வது.

— —

## அச்சுவேலி கி. ச. தலைவர் தெரிவு

யாழ்ப்பாணம். வியா

அச்சுவேலி கிராமசபையின் புதிய தலைவர் தெரிவு இம்மாதம் 10 ம்திகதி நடைபெறவிருக்கிறது. சபைக் யாரியாலயத்தில் இத்தெரிவு உள்ளூராட்சி உதவி ஆணைகாளர் திரு ஏ. ஏ. யோசேப் தலைமையில் நடைபெறும்.

வினரின் வில்லிசை ஆகிய நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

# சமசமாஜக் கட்சியின் வடபகுதி வேட்பாளர்

## பிரமுகர்களுடன் என். எம். ஆலோசனை

யாழ்ப்பாணம், வியாழன்

சமசமாஜக்கட்சித்தலைவர் டாக்டர்என். எம். பெரேரா நேற்று யாழ்ப்பாணம்வந்து எதிர்வரும் பொதுத் தேர்தலில் சமசமாஜக்கட்சிக்கு வடபகுதியில் இருக்கும் சாதக நிலைமைகள் குறித்து இங்குள்ள கட்சிப் பிரமுகர்களுடன் கலந்தாலோசனை செய்தார்,

சமசமாஜக்கட்சிக்கு வட பகுதி தேர்தல் தொகுதிகளில் உள்ள அனுகூலமான நிலைமைபற்றியும் வேட்பாளர்களை தேர்ந்தெடுப்பது பற்றியும் அவர் கட்சிப்பிரமுகர்களுடன் ஆலோசித்த தாகத் தெரிகின்றது.

வடபகுதியில் எந்தெந்தத் தொகுதியில் சமசமாஜக் கட்சிப் பிரமுகர்கள்போட்டியிடுவார்கள் என்பது பற்றியும் போட்டியிடும் வேட்பாளர்களின் விபரம்பற்றியும் டாக்டர் பெரேரா கொழும்பு திரும்பியபின் அங்குள்ள கட்சிப்பிரமுகர்களுடன் ஆலோசித்து முடிவெடுப்பார் என்றும் இன்று கொழும்பில் வேட்பாளர்களின்பட்டியல் வெளியிடப்படலாம்என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

பாலைதீவுபடகு விபத்தினுல் பாதிக்கப்பட்டுள்ள யல்வேறு குடும்பங்களையும் நேற்று டாக்டர் சென்று பார்த்து ஆறுதல் கூறினர்.

## தேடப்பட்டவர் பொலிஸில் சரண்

மீதோட்டமுல்லை, புதன்

கொலன்னுவை, கொலை கொள்ளை வழக்கின் முக்கிய எதிரி எனக் கருதப்பட்ட குமாரதாச என்பவர் சுமார் இரண்டுமாதங்களுக்குப் பின்னர் பொலிஸாரிடம் சரணடைந்தார்.

தலைமறைவில் இருந்தஇவரைக் கண்டு பிடிப்பவர்களுக்கு, அல்லது பொலிசில் ஒப்படைப்பவர்களுக்கு பொலிசார் சுமார் 5000 ரூபா சன்மானம் தருவதாக அறிவித்திருந்தது குறிப்பிடத் தக்கது.

கொலன்னுவையிலுள்ள பிரபல வர்த்தக ஸ்தாபனத்தின் மனேஜரான கே, ஆர். டி. சில்வா என்பவரைக் கொலைசெய்து ஸ்தாபனத்தில் சுமார் ஐம்பதினுயிரம் ரூபா கொள்ளை அடிக்கப்பட்டதாகக் கருதப்படும் இவ் வழக்கில் இதுவரை பன்னிரண்டுபேர் பொலிஸ பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

தலைமறைவில் இருந்த குமாரதாச மேலும் பல கொள்ளை வழக்குகளில் சம்பந்தப்பட்டவர் என பொலிசார் தெரிவித்தனர். (விநி)

## புதிய தர்மகர்த்தாக்கள்

யாழ்ப்பாணம், வியா:

கடையிற்சுவாமி குருவார அன்னசத்திர தர்மகர்த்தாக்கள் தெரிவு நேற்று மாலை திரு சி நாகராசா தலைமையில் நடைபெற்றது பின்வருவோர் புதிய தர்மகர்த்தாக்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்:

திரு சி நாகராசா (முன்னுள் யாழ் மாநகர பிதா) திரு சி வேலுப்பிள்ளை, திரு த சிவசுப்பிரமணியம், திரு சு முருகேசு, திரு சு தியாகராசா, திரு வே மூ வே நல்லநாதன், திரு சோ முத்துராசா.

— —

## இந்த நஷ்டத்தை கல்வி இலாகா பொறுப்பேற்குமா?

சுழிபுரம், புதன்

சுழிபுரத்திலிருந்துநுவரெலியாவுக்கு இடமாற்றம் பெற்ற ஆசிரியர் ஒருவர் அங்கு ஒருதொகைரொக்கப் பணம் நன்கொடை கொடுத்து வீட்டுவசதி பெற்ற இரு மாதத்தின் பின்னர் வேறு இடத்துக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளாராம்.

ரூபா 1000 நன்கொடை கொடுத்து வாடகைக்கு ஒழுங்குசெய்யப்பட்டிருந்த வீட்டையும் விட்டுவிட்டு அவர் இடமாற்றம் பெற்ற பாடசாலைக்கு அண்மையில் வீடு எடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது கல்விஇலாகாவின் இவ்வித இடமாற்றம் பற்றி ஆசிரியர்கள் பலத்தபுகார் தெரிவித்துள்ளனர். ஆசிரியர்களுக்கு ஏற்படும் இவ்வித நஷ்டத்தை கல்விஇலாகாபொறுப்பேற்றுக்கொள்ள வேண்டுமென ஆசிரியர்கள்வற்புறுத்திக்கேட்டுக் கொண்டுள்ளனராம்.

படியான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்டவர்கள் கூடிய சீக்கிரம் எடுப்பரென்றே மிக ஆவலுடன் எதிர்பார்க்கப்

## நெடுந்தீவு.

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

முகாமொன்று அமைககப்பட்டுளளது களளககடத்தல், களளக குடியேற்றம் முதலியவற்றைத்தடுப்பதற்காக லெப்டினன்ட் கனிபா தலைமையில் 17 பேர் இங்கு கடமையில் ஈடுபட்டுளளனர்.

— —

## எதிரிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாக அடையாளம் கண்டு கொண்டதாகவும் வீடு எரியும்போதுபிரதான ஒழுங்கையில் எதிரிகள் நின்றதாகவும் கூறினர்.

எதிரிகள் சார்பில் ஆஜரான அட்வக்கேட் என். சத்தியேந்திரா குறுக்குவிசாரணைசெய்தபோது அண்ணமலை கூறியதாவது: எதிரிகள் நால்வரும் வந்தனர். வேலி திடீரென எரிந்தது. கொளுத்தியதாக தெரியவில்லை ஓடிவிட்டனர். பந்தம் வைத்திருந்தவர் கொளுத்தியிருப்பார் என நினைக்கிறேன். வேலி திடீரென எரிய நான் ஓடிப்போனேன். 15 நிமிடம்வரை நான் அந்த இடத்திற்குவரவில்லை. நான் திரும்பிவந்தபோது என் வீடு எரியவில்லை வேலிதான் எரிந்தது.

வழ: எதிரிகள் எங்கு குடியிருக்கிறதென்று தெரியுமா? ஆம்.

வழ: நாகராசாவின் தகப்பன் பெயரென்ன?- கந்தையா.

வழ: 2-ம் எதிரியின் பெயரென்ன?- திருவாதிரை.

வழ: தகப்பன் பெயர் தெரியுமா?- ஆம்:

வழ: 3-ம் எதிரியின் தகப்பன் பெயரென்ன?- முதலியார்.

வழ: 4-ம் எதிரியின் தகப்பன் பெயரென்ன?- சுப்பிரமணியம்.

சாட்சிஅண்ணமலைமேலும் கூறியதாவது: சம்பவம் நடந்த இரவு வாழைத்தோட்டத்திற்குபோனேன் திரும்பி வந்து வீட்டில் நெருப்பை அணைத்தேன். மீண்டும் வாழைத்தோட்டத்திற்கு போய் காலைவரை இருந்தேன். மனைவியும் பிள்ளைகளும் வாழைத்தோட்டத்திற்கு பின்னுக்குபோனுர்கள் அவர்களை வாழைத்தோட்டத்தில் சந்திக்கவில்லை.

வழ: மறுநாள் மனைவி மக்களைக் கண்டீர்?- ஆம்.

வழ: பொலிஸ் நிலையத்திலிருந்து திரும்பி வந்தபின் எங்குபோனீர்?- எரிந்த வீடுகளைப் பார்க்க.

வழ: நாகலிங்கம் வீட்டை போனீரா?- ஆம்.

வழ: என்ன கண்டீர்-? எரிந்த அடுப்படியை.

சாட்சி மேலும் தெரிவித்ததாவது: கணபதிஐயன், கதிரன் நாகி, கணபதி சின்னட்டி ஆகியோரின் வீடுகள் எரிந்ததைகண்டதும் மனைவி பிள்ளைகளை கூட்டிப்போனேன்.

மேல்விசாரணை இன்று காலை தொடர்ந்து நடைபெறும்.

தரசே, கூவித்துக்கொள்ளுந் தனையடியேனைக் குறிக்கொள்வதே.

-அப்பர் அடிகள்

## 54 சடலட

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

சித்தன்குறிச்சி கனகரத்தினம் சுப்பிரமணியம் ஆகியவர்களின் சடலங்களே நேற்று அடையாளம் காட்டப் பட்டு உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது, இன்னுமோர் சடலம் அடையாம் காணப்படுவதற்காக வைக்கப்பட்டுள்ளது.

## 72 பேர்பிரயாணம் செய்தனர்

இதுவரை மீட்கப்பட்ட சடலங்களின் தொகையிலிருந்தும், காணமற் போனதாகக் கிடைத்துள்ள தகவலின் படியும் விபத்துக்குள்ளான படகில் 73 பேர் பிரயசணஞ் செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். 54 சடலங்கள் மீட்கப்பட்டும், 7 பேரைக் காணவில்லையென்றும், 12 பேர் உயிர் தப்பிக்கரை சேர்ந்தனர் என்றும் பொலிஸ் புள்ளி விபரம் கூறுகிறது.

— —

## மகா சிவராத்திரி

யாழ்ப்பாணம், வியா.

இருபாலை சைவ பரிபாலன சங்க மகாசிவராத்திரி விழா கோப்பாய் தெற்கு கற்பகப் பிள்ளையார்கோவிலில் நாளை நடைபெறும்.

கூட்டுப்பிரார்த்தனை, பக்திப்பாடற் பஜனை உரை நிகழ்ச்சி, இசைநிகழ்ச்சி, என்பனவற்றுடன் நடைபெறும் இவ்விழா, நிறைவு நிகழ்ச்சியாக சுவாமி வீதி வலம்வருவார். 'சிவாயநம' என்னும் ஐந்தெழுத்தை பதினைந்து நிமிடத்தில் அதிகமாக எழுதுபவர்களுக்கு இவ விழாவில் பரிசுவழங்கவும் விழாக்குழுவினர் முடிவு செய்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org